விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 23 வெள்ளிக்கிழமை (05.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 107

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல் படுத்துவது என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல் படுத்துவதற்காக 22 அமைச்சர்களும் சில நிறுவனங்களும் காலவரையறைகளை நிர்ணயித்து பணியாற்றவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவை தாக்க வட கொரியா அனுமதி

(பியொங்யாங்)

அமெரிக்காவுக்கு எதிராக, அணுகுண்டு தாக்குதலை நடத்தும் சாத்திய கூறு உட்பட அனைத்துத் தாக்குதல்களையும் நடத்த வட கொரியா தனது இராணுவத்திற்கு இறுதி அனுமதி தந்திருப்பதாக கூறுகிறது.

அமெரிக்கா பசுபிக் பெருங் கடல் பகுதித்தீவான குவாமில் அமைந்திருக்கும் அதன் தளத்தைச் சுற்றி ஏவுகணை தற்பாதுகாப்பை பலப்படுத்த தொடங்கியதையடுத்து இந்த அறிக்கை வெளி வருகிறது.

வட கொரியாவின் அச்சுறுத்தல்கள் ஒரு உண்மையானமற்றும் தெளிவான ஆபத்தை தோற்று விப்பதாக அமெரிக்கா கூறுகிறது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நகர்வு (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். - மன்னார் சேவை பஸ்கள் பணிப் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் இன்றிலிருந்து பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தலைவர் கே.கங்காதரன் அறிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பேருந்துகளுக்கு கூறுவிலை கோரல் மூலம் பய்ணிகள் சேவை அனுமதி வழ்ங்குவதற்கான கேள்வி அறிவித்தல் நேற்று தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு தலைவரினால் பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதனை ஆட்சேபித்து மன்னார் மாவட்ட பேருந்துகள் யாவும் சேவை பகிஷ்கரிப்பினை மேற்கொள்வதாக எமக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக போராட்டம் கண்டிக்கிறார் மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

தமிழகத்தில் இடம்பெற்று வரும் போராட்டங்களுக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் இலங்கையர்களுக்கு எதிரான மேற்கொள்ளப் பட்டுவரும் தாக்குதலை நிறுத்துமாறு தமிழக கத்தோலிக்க சபையிடம் கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரியுள்ளார்.

தமிழகத்தில் வாழும் இலங்கையர்கள் தொடர்பில் சர்ச்சைகள் இருந்தால் அதனை பேச்சுவார்த்தைகள் மூலம் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வீரர்கள் ஐ.பி.எல்லில் இருந்து வெளியேற வேண்டாம் எனப் பணிப்பு

### உத்தரவு விட்டது அரசு

(கொழும்பு)

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி தொடரை இலங்கை அணியினர் புறக்கணிக்க வேண்டும் என பல்வேறு அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் எக் காரணம் கொண்டும் குறித்த கிரிக்கெட் போட்டி தொடரிலிருந்து வெளியேறக் கூடாது என இலங்கை வீரர்களுக்கு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நிபந்தனை, தமிழக எதிர்ப்பு உட்பட முக்கிய சில விடயங்களை கருத்தில் கொண்டே இந்த ஆலோசனையை வீரர்களுக்கு அரசு வழங்கியுள்ளது என்று தெரியவருகிறது.

இலங்கை வீரர்கள் பங்கேற்றால் ஐ.பி.எல். போட்டிகளை சென்னையில் நடத்துவதற்கு இடமளிக்க மாட்டாது என தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு அறிவித்ததை அடுத்து ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் கலந்து கொள்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

தமிழக முதல்வரின் இந்த செயற்பாட்டுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த சிங்கள அமைப்புகள் ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தின.

இந் நிலையில் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் இலங்கை வீரர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என இந்திய மத்திய அரசு இலங்கையிடம் உறுதியளித்திருந்தது.

இதனையடுத்து ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்பதற்கு வீரர்கள் இலங்கையில் இருந்து புறப்பட்டனர். எனினும் இலங்கையில் ஆர்ப்பாட்டங் (19ஆம் பக்கம் பார்க்க)

## இனக் கலவரத்தை ஏற்படுத்த பொதுபல சேனா முயற்சி!

### ஆங்கில சஞ்சிகை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் செயற்படுகின்ற பௌத்த கடும் போக்கு அமைப்பான பொதுபல சேனா அமைப்பு பர்மாவில் ஏற்பட்ட இனக் கலவரத்தைப் போன்ற ஒன்றை உருவாக்க இருப்பதாக ஆங்கில சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2000ஆம் ஆண்டுகள் பர்மாவில் 969 என்ற பௌத்த அடிப்படைவாத அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அது அங்கிருந்து சிறுபான்மை முஸ்லிம்களை வெளியேற்ற தீவிர முயற்சிகளை மேற்கொண்டது.

அத்துடன் பல முஸ்லிம் சிறுவர்களை கடத்திச்சென்று பல்வேறு துன்புறுத்தல் (19ஆம் பக்கம் பார்க்க)

## பொதுபல சேனாவின் செயற்பாட்டுக்கு ஆதரவாக இருக்கிறதா அரசாங்கம்?

### பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா கேள்வி

(கொழும்பு)

பொதுபல சேனா இயக்கத்தின் நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்தும் மௌனமாக இருந்தால் முஸ்லிம் சமூகம் அரசுக்கு வழங்குகின்ற ஆதரவை மீள்பரிசீலனை செய்ய வேண்டி ஏற்படும் என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக பொதுபல சேனா எனும் பெயரில் இயங்குகின்ற சிங்கள பேரினவாத இயக்கம் முஸ்லிம், சிங்கள மக்களுக்கு இடையில் குழப்பங்களையும் பிரச்சினைகளையும் உண்டுபண்ணுவதோடு முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக இந்த மோசமான நிலையில் செயற்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் அரசாங்கத்தின் உயர் அமைச்சர்களிடமும் கட்சித்தலைவர்களிடமும் தொடர்ச்சியாக நாம் பேசி வருகின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறுவதை கட்டுப்படுத்த வேண்டும் என்று உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும் அவ் உறுதிமொழி நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பொதுபல சேனாவினுடைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் எந்தவொரு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையிட்டு நாம் மிகவும் மன வேதனை அடைகின்றோம்.

அரசாங்கம் பொதுபல சேனா இயக்கத் (19ஆம் பக்கம் பார்க்க)

## இந். வெளிவிவகார அமைச்சருடன் ரணில் விக்கிரமசிங்க பேச்சு



(புதுடில்லி)

புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக புதுடில்லியில் இருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மனித (20ஆம் பக்கம் பார்க்க)

## சா/த பெறுபேறுகள் வெளியாகின யாழ்.இந்துவில் 18 பேருக்கு 9 ஏ

(கொழும்பு)

2012ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.இந்துக் கல்லூரியின் 18 பேர் 9ஏ சித்தி பெற்றுள்ளனர். மேலும் 37 பேர் 8 ஏ யும் 13 பேர் 7 ஏ யும் சித்தி பெற்றுள்ளனர்.

பெறுபேறுகளை www.doenets.lk என்ற முகவரியில் பார்வையிட முடியும். இதேவேளை இணையத்தளத்தில் பரீட்சை பெறுபேறுகளை பார்வையிடுவோருக்கு பரீட்சை திணைக்களத்தினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

உங்களது பேறுபேற்றினை தெரிந்து கொள்வதற்கு உங்களது பரீட்சை சுட்டெண்ணை திருத்தமாக உட்படுத்துக. வேறொரு சுட்டெண்ணை உட்படுத்துவதால் வேறொருவரது பெயரும் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு


## பட்டதாரி பயிலுநர்கள் 50 பேருக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

50 பட்டதாரி பயிலுநர்களுக்கு விவசாய அமைச்சின் கீழ் நேற்று நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கினார்.

இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் தலா 3 பேர் வீதம் 45 பேர் உள்வாங்கப்பட்டதோடு யாழ்.மாவட்ட செயலகத்திற்கு 5 பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர். (எ-6)


உடனடி வேலைவாய்ப்பு

**தச்சுத்தொழிலாளர் (Carpenters)**

மேற்குறிப்பிட்ட துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

**இல.45 காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.** (சி-2875)

**பிள்ளையார் இன்**

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்கள் தேவை

சூழலை சுத்தமாக்கும் சேவையை வழங்கும் எமது நிறுவனத்திற்கு மேற்பார்வையாளர் (ஆண்,பெண்) வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகைமையுள்ளவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பவும்.

**கிளீன் வெல் (பிறைவேட்) லிமிட்டெட்**
**இல.45 காட்டுக்கந்தோர் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**தொ.பே:021 3202307** (சி-2878)




## யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா - 2013

அடியார் பெருமக்களே!

மேற்படி திருக்கோயிலின் பெருந்திருவிழா நிகழும் நந்தன வருடம் பங்குனி மாதம் 24ஆம் நாள் (06.04.2013) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி சித்திரை மாதம் 04ஆம் நாள் (17.04.2013) புதன்கிழமையுடன் பூர்த்தி பெற எல்லாம் வல்ல பிள்ளையாரின் திருவருள் கூடியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 06.04.2013 சனிக்கிழமை | கொடியேற்றம் | ந.பகல் | 12.00மணி |
| 10.04.2013 புதன்கிழமை | தங்கரதம் | மாலை | 07.00 மணி |
| 13.04.2013 சனிக்கிழமை | வேட்டை திருவிழா | காலை | 07.30 மணி |
| 13.04.2013 சனிக்கிழமை | சப்பறம் | மாலை | 07.00 மணி |
| 14.04.2013 ஞாயிற்றுக்கிழமை | தேர் | காலை | 09.00 மணி |
| 15.04.2013 திங்கட்கிழமை | தீர்த்தம் | காலை | 11.00 மணி |
| 16.04.2013 செவ்வாய்க்கிழமை | பூங்காவனம் | மாலை | 07.00 மணி |

பகல் திருவிழாக்கள் வசந்த மண்டபப் பூசை காலை 11.00 மணி தொடர்ந்து உள்வீதி உலா நடைபெறும்.

மாலைத் திருவிழாக்கள் வசந்த மண்டபப் பூசை மாலை 06.00 மணி தொடர்ந்து உள்வீதி, வெளிவீதி உலா நடைபெறும்.

திருவிழா நாட்களில் தினமும் நண்பகல் 12.00 மணிக்கு கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்.

இங்ஙனம்
பிள்ளையார் பணியில் நிற்கும் கோயில் நிர்வாகம்.


விளம்பர அன்பளிப்பு: மைதிலி நகைமாடம்
89v, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். T.P : 021 222 7902
யாழ் மைதிலி ஜீவலர்ஸ்
79z, Sea Street Colombo - 11 T.P : 011 2390239


பல்துறை வல்லான்

# கலாநிதி த. கலாமணி அவர்களின் மணி விழா



**தலைமை**
**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

**இடம்:** யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - கரவெட்டி

**காலம்:** 07.04.2013 ஞாயிறு பி.ப. 2.30 மணி

**நிகழ்ச்சி நிரல்**

**மங்கல விளக்கேற்றல்**

கலாபூஷணம் வே.சிதம்பரநாதன், டாக்டர் கே.ராதாகிருஷ்ணன்
திரு.க.கணேசநாதன், திரு.கி.நடராசா,
திரு.ம.லக்குமிகாந்தன், திரு.ச. தர்மரத்தினம், திரு.வே.சேந்தன்

**இறை வணக்கம்**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவிகள்

**தமிழ்த்தாய் வாழ்த்து**

திரு.த.றொபேட் (சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**வரவேற்புரை :** திரு.வை.விஜயபாஸ்கர் (அதிபர்)

**ஆசியுரைகள்:** சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக்குருக்கள்
பேராசிரியர் ஞா.பிலேந்திரன்
அருட்திரு. இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார்
பேராசிரியர் க.சின்னத்தம்பி

**தலைமையுரை:** பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

**வாழ்த்துரைகள்**

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் (பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம்)
பேராசிரியர் தி. வேல்நம்பி (பீடாதிபதி, முகாமைத்துவப் பீடம்)
திரு.க.யோகநாதன் (பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)
பேராசிரியர் கி.விசாகரூபன் (தலைவர், தமிழ்த் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.தெணியான் (பிரபல எழுத்தாளர்)
திரு.எஸ்.சேதுராஜா (அதிபர், நெல்லியடி ம.ம. வித்தியாலயம்)
கலாநிதி அனுஷியா சத்தியசீலன் (தலைவர், கல்வியியற்துறை)
திரு.சுந்தரம் டிவகலாலா (முன்னாள்செயலாளர்,கல்விபண்பாட்டுஅலுவல்கள்விளையாட்டுத்துறைஅமைச்சு)
திரு.ந.துரைராஜா (தலைவர், அல்வாய் மனோகரா சனசமூக நிலையம்)
கலாநிதி ஜெயலஷ்மி இராசநாயகம் (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற் துறை)
வே.சிவராஜலிங்கம் (முன்னாள் பிரதேச சபை செயலர்)

**சிறப்பு மலர் வெளியீடு**

**வெளியீட்டுரை:** திரு.பா.தனபாலன் (இணைப்பாளர், யாழ்.தேசியகல்வியியற்கல்லூரி)

**ஐந்து நூல்களின் நயப்புரை**

திரு.இ.இராஜேஸ்கண்ணன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

**பாராட்டு வைபவம்**

**ஏற்புரை:** விழா நாயகன்

**நன்றியுரை:**

திரு.வி.செந்தூரன் (விரிவுரையாளர், வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்)

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மணி விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.**

**- மணி விழாக் குழுவினர்**

(சி-2881)


## தேவை

யாழ்ப்பாணம்,வன்னி பிரதேசங்களில் இயங்கவுள்ள வைத்தியசாலைக்கு பின்வருவோர் தேவை

☆ வைத்தியர்கள்(MBBS,RMP,RMO)
☆ தாதிகள் அல்லது பயிற்சி தாதிகள் (பயில விரும்புவோரும்)

தொ.பே:- 0777750391 (2314)

## வீடு வாடகைக்கு உண்டு

சுன்னாகம் வருசப்புலம் அம்மன் கோயில் சூழலும் KKS வீதிக்கும் அண்மையிலும் அமைந்துள்ளவீடுவாடகைக்குவிடப்படும். இது தனியார் ஸ்தாபனங்களுக்கோ,அரச உயர் உத்தியோகத்தர்களுக்கோபொருத்தமானது.

தொடர்புகளுக்கு:-
**0757131028**

(சி-2876)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# செல்வம்

ஒரு ஊரிலே செல்வந்தர் இருந்தார். அவரிடம் பணத்திற்குப் பஞ்சம் இல்லை. அதனால் இவ்வுலகில் அவரால் முடியாத காரியம் எதுவுமே கிடையாது என நினைத்தார். பணம் இருந்தால் அந்த நினைப்புத் தானாகவே வந்துவிடும் தானே...

அந்த ஊருக்கு "குருநானக்" ஒரு தடவை வந்தார். அவருக்கு இந்த செல்வந்தர் மிகவும் பிரமாதமாக ஒரு வரவேற்பு கொடுத்தார்.

எங்கள் வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட்டு விட்டு போக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரும் "சரி"யென்று சம்மதம் தெரிவித்தார்.

உடனே தனது பங்களாவில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார். "குருநானக்"கை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்று அமரவைத்து, "ஐயா நான் இந்த ஊரி லேயே மிகவும் வசதி படைத்தவன். என்னாலே அனைத்தும் முடியும். உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்றால் சொல்லுங்கள். எவ்வளவு செலவானாலும் பரவாயி ல்லை" என்று பணிவாகச் சொன்னார்.

இதைக் கேட்டதும் குருநானக் சிந்தித்தார். அதன்பின் தன்னுடைய சட்டைப் பையினுள்ளே கையை விட்டு ஒரு பழைய ஊசி ஒன்றை எடுத்தார். அதை செல்வந்தரிடம் கொடுத்தார். இதோ... பாருங்கள்... இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய உதவி இதுதான் என்றார்.

ஊசியை கையிலேயே வாங்கிக் கொண்ட இவர் "இதை என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்" என்றார்.

"நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால்... இந்த ஊசியை கவனமாக வைத்துவிட்டு நாம் இருவரும் இறந்து போனதன் பின்னர், பின்னால் சந்திப்பதற்கு வாய்ப்புள்ளது. அப்போது ஊசியை என்னிடம் கொடுங்கள். இதுதான் நீங்கள் எனக்காகச் செய்யவேண்டிய உதவி" என்று குருநானக் சிரித்தவாறு கூறினார்.

அது எப்படி சரிவரும்... நான் இறக்கும் போது எப்படி இந்த ஊசியை எடுத்துக் கொண்டு இன்னொரு உலகத்துக்கு வர முடியும்?" என்றார்.

"இந்த ஊசி மாதிரியான சிறிய பொருளை நாம் இறக்கும் போது எடுத்துக்கொண்டு போக முடியாது என்றால், எப்படி உங்களின் செல்வத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு செல்ல முடியும்?" என்று குருநானக் கேட்டார்.

அதன் பின்னர் அந்தப் பெரியவர் யோசனை செய்ய ஆரம்பித்தார்.

அதன்பின் குருநானக் சொன்னார்; நாம் செய்யும் நல்லது கெட்டதுதான் கடைசி வரைக்கும் இருக்கும். அடுத்தவர்கள் நன்றாக வாழ வழி செய்ய வேண்டும். அப்படி செய்யாவிட்டால் எந்தப் பிரயோசனமும் கிடையாது" என்றார்.

இதைக்கேட்டதும் செல்வந்தரின் அறிவுக்கண் திறந்தது. உடனே குருநானக் வணங்கினார்.

"ஐயா! என்னிடம் இருந்த ஆணவம் போய்விட்டது. இனி மேல் என்னிடம் இருக்கிற செல்வத்தை நல்ல வழியிலே செலவு செய்வேன்" என்றார்.

பணம் எப்போதும் எம்மோடு இருக்காது என்பது இதிலிருந்து புரிந்து கொள்ளமுடிகிறது.

பணமானது முறையான வழியிலே சேர்க்கப்படவேண்டும். அத்துடன் சரியான வழியிலும் செலவு செய்ய வேண்டும். அதனால் ஏற்படும் மனநிறைவு–அதை அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்.

சொர்க்கத்திற்கு போகிறவர்கள் இவ்வுலகில் இருந்து பணத்தை எடுத்துச் செல்ல முடியாது. இவ்வுலகில் சேகரிக்கும் செல்வத்தை மற்றவர்களுக்கு பயன்படும்படி இங்கே செலவு செய்து கொள்வது நல்லது. அதன்மூலம் கிடைக்கப்பெறும் நன்மையையே நாம் மறுவுலகிற்கு எடுத்துச் செல்லலாம்– இப்படி ஆன்மீகவாதிகள் கூறுகிறார்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சிறுபோக நெற்பயிர் பங்குகளை பெற்றுக்கொள்வதில் சிரமம்

## விவசாயிகள் கவலை

இரணைமடுக் குளத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் சிறுபோக பங்குகளை அணைப்பதற்குரிய காணிகள் இல்லாமையால் சிரமங்களை எதிர் கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

(ஏ9 மேற்கே உள்ள) கணேசபுரம், டி-08, டி-10, டி-05, டி-06 ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகளில் பங்குகளை விற்றவர்களை விட விதைப்பதற்கு தயாராகவுள்ள 700 பங்குகளிற்குரிய காணிகள் இதுவரை காண்பிக்கப்படவில்லை. இம்முறை சிறுபோகத்திற்கு இந்தக் குளத் தின் கீழ் உள்ள டி-03, டி-04 மகிழங்காடு, சின்னக்காடு ஆகிய இடங்களில் மேலதிகமாக காணிகள் உள்ள போதிலும் இக் காணிகளில் பங்குகளை பெறுவதற்கு இயலாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு பதிலாக மாவடி வாய்க்கால் என்ற இடத்தில் இக் காணிகளை ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் டி-08, டி-10 போன்ற இடங்களில் இருந்து இந்த மாவடி பகுதி வாய்க்காலான 20 கிலோ மீற்றர் தூரத்திற்கு செல்ல வேண்டிய அவலநிலை உள்ளதாகவும் விவசாயிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிறுபோக பயிர்ச் செய்கைக்கு இரணைமடுக்குளத்தின் கீழ் 8ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் 10 ஆயிரத்து 500 ஏக்கருக்கான பசளைப்பட்டியல் கிடைக்கப்பெற சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும் கமநல சேவை வட்டாரங்களில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது.

ஏற்கனவே பங்குகள் அணைக்க முடியாத பகுதிகளாக உள்ள இடங்களில் வாய்க்கால் வேலை நடைபெறுவதால் ஏனைய பகுதிகளுக்கு இந்தப் பங்குகள் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த போகத்தின் போது நீர் போதாமையால் இவ் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நெற்செய்கைக்கான கூட்டம் நடைபெறும் போது ஒருங்கிணைந்து செயற்படும் திணைக்களங்கள் பங்குகளை அணைக்கும் விடயத்தில் ஒருங்கிணைந்து செயற்படும் திணைக்களங்கள் பங்குகளை அணைக்கும் விடயத்தில் ஒருங்கிணைந்து செயற்படாமையும் இதற்கான காரணம் என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இவ்விடயத்தில் அரச திணைக்களங்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் இப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத் தொழில் அலுவலகத்தினால் சமூகக் கலந்துரையாடலும் ஆலோசனை சபைக்கூட்டமும் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடத்தப்படவிருப்பதாக யாழ். உதவித் தொழில் ஆணையாளர் நீ. ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே மேற்குறித்த கலந்துரையாடலும் கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 110 | 120 | 120 |
| தக்காளி | 60 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 40 | 40 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 40 | 50 | 60 |
| புடோல் | 40 | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80-90 | 80-110 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | 80 |
| பயற்றங்காய் | 30 | 50 | 40 | 60 |
| லீக்ஸ் | 130 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 70 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 90 | 60 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | -- | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 60 | 40 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40-50 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 80 | 80 | 100 | 100 |
| [illegible] | -- | 200 | -- | -- |

## இராசி பலன்

05.04.2013
(பங்குனி 23, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
தசமி முன்னிரவு 7.29 மணிவரை
திருவோணம் முன்னிரவு 9.54 மணிவரை
இராகுகாலம் 10.38 - 12.08 மணிவரை
சுபநேரம் 6.08 - 7.38 மணிவரை

**மேடம்** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர், வீட்டை பழுதுபார்க்கும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியமான நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், மனக் குழப்பம் அகன்று மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வீடுகட்டும் முயற்சியில் சில தாமதங்கள் ஏற்படலாம், பேச்சில் நிதானம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை.

**கடகம்** உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், அபூர்வ சந்திப்புண்டு.

**சிங்கம்** பகைவர் விலகுவார்கள், பழைய கடனை வசூலாக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், தெய்வ வழிபாட்டால் செல்வம் வந்து சேரும் நாள், தேக நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், சுவாரஷ்யமான நாள்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளால் ஏற்படும் செலவுகளைக் குறைக்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், தாய்வழி ஆதரவு பெருகும், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், உறவினர் உதவி செய்ய முன்வருவர்.

**தனுசு** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், அரசியலில் ஈடுபாடு காட்டும் எண்ணம் உருவாகும், பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உடல்நலம் சீராகும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டும் எண்ணம் உருவாகும், பெரியோர் ஆசியுண்டு, சயன சுகமுண்டு.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும், இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், மாலை நேரம் மகிழ்ச்சிக்குரிய சம்பவமொன்று நடைபெறலாம், சிறிய விடயத்திற்குக்கூட கோபப்படும் சூழ்நிலை உருவாகும்.

**மீனம்** அதிர்ஷ்டகரமான நாள், கூட்டு முயற்சிகள் வெற்றிதரும், வழிபாடு நன்மை தரும், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அகலமாக்கும் பணி தாமதப்படுத்தப்படுகிறது

(கரவெட்டி)

பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி செல்லும் 750 பிரதான வீதி அகலமாக்கும் பணி மிகவும் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்களும் பயணிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் அதன் புனரமைப்பு பணிகள் இழுத்தடிக்கப் படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியால் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயணிக்கின்றனர்.

மேலும் இவ்வீதியில் ஆங்காங்கே கற்கள் கொட்டப்பட்ட நிலையிலும் கிடங்குகள் வெட்டப்பட்ட நிலையிலும் போக்குவரத்திற்கு பெரும் இடையூறாக காணப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இவ்வீதியை மிக விரைவாக புனரமைத்து தர வேண்டும் என மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)




நன்றி: ஐலண்ட்

## கிராமக்கோடு சந்தியில் புத்தாண்டு சந்தை

(தும்பளை)

சதொச விற்பனை நிறுவனத்தினால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உண வுப் பொதிகள் ஆயிரம்ரூபாவுக்குவிற்பனைசெய்யப்படவுள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தரால் நடத்தப்படும் திவிநெகும புத்தாண்டு விழா எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு அருகாமையிலுள்ள கிராமக்கோடுச் சந்தியில் நடைபெறவுள்ளது.

இதன்போது உள்ளூர் உற்பத்திப் பொருட்கள், தைத்த ஆடைகள், கடலுணவுகள், மட்பாண்டங்கள், அலுமினிய பொருட்கள் ஆகியன விற்பனை செய்யப்படுவதுடன் புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சதொச விற்பனை நிலையம் ஆகியனவற்றிலும் விற்பனை செய்யப்படவுள்ளன. (அ-3-19)

## விளையாட்டு விழா ஒத்திவைப்பு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக விளையாட்டு விழா இறுதி நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு இறுதி நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வல்வெட்டி கழுகு விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

# சமுர்த்தி திணைக்களத்தின் நான்கு புதிய நடைமுறைகள்

(தும்பளை)

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றுவோர் சமுர்த்தி அதிகாரசபை திணைக்களமாக்கப்பட்டதும் தமது தொழில்களில் தாங்களே பொறுப்புக்கூறும் உத்தியோகத்தராக மாற்றம் பெற கடமைப்பட்டுள்ளனர்.

மேலும் இச்சபை திணைக்களமாக்கப் படும்போது இவ் உத்தியோகத்தர்கள் நான்கு மாற்று நடவடிக்கைளை தேர்ந்தெடுக்கலாம் என அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் சங்க தலைவர் ஜெகத் குமார தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஒன்றுகூடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இணைந்து கொண்டமை பெருமைக்குரியது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் காணப்படும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்ப இன்னும் ஒரு மாத காலத்திற்குள் நியமனம் வழங்கப்படும்.

திணைக்களமாக்கப்படும்போது நான்கு மாற்று நடவடிக்கைகள் உண்டு. அவை வருமாறு,

✶ சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இதுவரை காலமும் ஆற்றிய சேவைக் காலத்தில் தொடர்ந்து தற்போது பெற்றுக் கொண்டுவரும் ஊதியத்துடன் வேலை செய்யலாம். இதன்போது அரசாங்கத்தினால் பணிக்கொடைகள் வழங்கப்படமாட்டாது.

✶ ஊழியர் சேமலாய நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுடன் திணைக்களம் ஆரம்பமாகும் திகதியிலிருந்து புதிய நியமனத்தை பெற்றுக் கொள்ளலாம். இதன் போது புதிய சம்பளமே வழங்கப்படும்.

✶ ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் நட்டஈடும் அவர்களுக்கு வழங்கப்படும்.

✶ தொடர்ந்து அதிகார சபையில் இருப்பவர்கள் திணைக்களத்தில் வேலைகளை மேற்கொள்பவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் வழங்கப்படும். ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது.

எனவே, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இவ்விதிமுறைகள் நான்கில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்தல் வேண்டும் என்றார். (அ-3-19)


சிறிய நடுத்தர தொழில் முயற்சியில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சி - 2013

IT Solutions for Your Business

Exhibition & Seminar

Entrance FREE

நோக்கம்

- வியாபார சமூகத்தையும் அதனோடு தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குனர்களையும் ஒரே இடத்தில் இணைத்தல்.
- தகவல் தொழில்நுட்ப பாவனையூடாக வியாபார செயற்பாடுகளை இலகுவாக மேம்படுத்தல்.
- தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குனர்களின் சந்தை வாய்ப்புக்களை அதிகரித்தல்.

இடம் : PILLAIYAR Inn, Manipay Road, Jaffna
காலம்: 07/04/2013, ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.00 - மாலை 4.30

இக்கண்காட்சி சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளருக்கு வழங்குவது என்ன?

- வியாபார தொடர்பாடல் நடவடிக்கைகளை சுலபமாக மேற்பார்வை செய்வதற்கான வழியை ஏற்படுத்தும்
- பொருத்தமான தகவல்தொழில்நுட்ப பிரயோகத்தினூடாக அன்றாட வியாபாரப் பிரச்சனைகளுக்கான தீர்வு
- தொழில் முயற்சியாளர்களது தொழில்துறைகளின் தேவைக்கேற்றவாறான தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களை (Software) வடிவமைப்பதற்கான சேவை வழங்குனர் தொடர்பை ஏற்படுத்த முடியும்.

இக்கண்காட்சியில் பங்குபற்றி தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக உங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

Organized By: CCIY — Chamber of Commerce and Industries of Yarlpanam — Unity is Strength

Supported By: ICTA ideas actioned; e Sri Lanka smart people smart island


# புதுவருடத்தை முன்னிட்டு வசந்தவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு வலி. வடக்கு கலாசார பேரவையினரால் நடத்தப்படும் வசந்த விழா (பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்) எதிர்வரும் 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் உள்ள சந்திர மௌலீஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறுமென தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.ஸ்ரீமோகனன் அறிவித்துள்ளார்.

இதில் தயிர் முட்டி உடைத்தல், போர்த் தேங்காய் அடித்தல், மரதன் ஓட்டப் போட்டி, கைக்கொடிச் சவாரி, பலம்பார்த்தல் ஆகிய பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம் பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மேற்குறித்த போட்டிகளில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டவர்கள் மட்டுமே பங்கேற்க முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இவ் விளையாட்டுக்களில் பங்கேற்க விரும்புவர்கள் தெல்லிப் பழை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களை பெற்று அதனைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியுமென அவர் அறிவித்துள்ளார். (அ-2)


மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

06.04.2013 முதல் 11.04.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உப்பு பாவனையால் 30 வீதமானோருக்கு இரத்த அழுத்த நோய் ஏற்படுகின்றது

(கொழும்பு)

இலங்கையில் இரத்த அழுத்த நோய் காரணமாக 62 வீதமானோர் பக்கவாத நோய்க்கு ஆளாகிறார்கள். 49 வீதமானோர் மாரடைப்புக்குள்ளாகின்றனர். இவர்களில் 30 வீதமானோர் அதிகளவு உப்பு பாவனை காரணமாகவே இரத்த அழுத்த நோய்க்கு ஆளாகின்றனர் என சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு சுகாதார அமைச்சு இம்முறை உப்பு பாவனையை குறைப்போம் இரத்த அழுத்த நோயை ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் மக்களிடையே உப்பு பாவனையை கட்டுப்படுத்துவதற்கான திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

இதனை முன்னிட்டு நேற்று முன்தினம் சுகாதார கல்விப் பணியகத்தில் விசேட செயலமர்வொன்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகத் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சுகாதார அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒரு நபர் ஒரு நாளைக்கு 5 கிராம் (ஒரு தேக்கரண்டி) உப்பை மட்டுமே உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். எனினும் இலங்கையில் 12.5 கிராம் உப்பை உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள். சோறு சமைக்கும் போது உப்பு போடக்கூடாது. இதற்கு பதிலாக றம்பை, கறுவா போன்ற இயற்கை வாசனைத் திரவியங்களை பாவிக்க வேண்டும்.

கறி வகைக்குள் உப்பு போடும் போது முடிந்தவரை குறைந்தளவில் உப்பை பயன்படுத்த வேண்டும். அதற்குப் பதிலாக எலுமிச்சைப் பழம் கொரக்கா புளி, பழப்புளி போன்றவற்றை பயன்படுத்தலாம்.

அதிகளவு உப்பு சேர்க்கப்பட்ட கருவாடு வகைகள் சோஸ், உப்பு, பிஸ்கட், உப்பு தூவப்பட்ட கிழங்கு பொரியல், உப்பு அதிகளவு பயன்படுத்தப்பட்ட பிரைட் ரைஸ், உடன் நூடில்ஸ் போன்றவற்றினை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது தொற்றா நோய்களாக மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரக நோய் என்பவற்றுக்கு அதிகளவு உப்பு பாவனை, அதிகளவு சீனி பாவனை, புகைத்தல், மது அருந்துதல், எண்ணெய் சேர்க்கப்பட்ட உணவு வகைகள், காபோவைதரேற்று கூடுதலாகவுள்ள மாப்பொருட்கள் கலந்த உணவு பயன்பாடு போன்றவையே காரணம் என குறிப்பிட்டனர்.

தினமொன்றுக்கு ஒருவர் 10 ஆயிரம் தடவைகள் அடி எடுத்து வைத்து நடைப் பயிற்சி செய்தால் ஆரோக்கியமான நபராக இருக்க முடியும். தினமொன்றுக்கு ஒரு நபர் 6 தேக்கரண்டி சீனியை மட்டுமே எடுக்க வேண்டும்.

தன்னுடைய இரத்த அழுத்தத்தை 140-90 ஆக இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதிகளவு காய்கறி வகைகள், பழங்களை உட்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி (ஓவர் கேம்) நடைபெறவுள்ளதாக இந் நிலையம் அறிவுத்துள்ளது.

இதில் அனைத்து அணிகளையும் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தங்களது அணிகளைப் பதிவு செய்ய விரும்புபவர்கள் நேற்றில் இருந்து எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி வரை ஜனசக்தி சனசமூக நிலையம், அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பதிவினை செய்து கொள்ளலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு -0777111335, 0712029109 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால் உடனடியாக தங்கள் வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)


**MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பயின்று இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டமளிப்பு விழாவில் Diploma in IT, Higher Diploma in IT பட்டம் பெறும் மாணவர்களிற்கு வாழ்த்துக்கள்**

**~விரிவுரையாளர்களும் மாணவர்களும்**



S.Theivamainthan, S.Sanjivkumar, T.Bakeerathan, R.Chithamparanathan, S.Kavitha, A.Puvanesan, M.kayathiri, T.Kuganithy, S.piriyatharsini, V.Saseekaran, R.Raguraam, J.Thayalini,, M.Kayathiri, R.Niroshini,, N.Senthuran, P.Kaitheki, P.Uthayanthy, S.Sangeetha

புதிய கல்வியாண்டிற்கான விரிவுரைகள் யாவும் 7 ஏப்ரல் 2013 ஆரம்பமாகின்றது. புதிய மாணவர்களிற்கான பதிவுகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்திய்டைந்தவர்கள் நேரடியாகவும், சித்தியடையத் தவறியோர் **FIT** கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் இக்கற்கை நெறியை பயில முடியும். பல்கலைக்கழக மாணவர்களும் இக் கற்கை நெறியை மேலதிகமாக தொழில் வாய்ப்புக்கருதி பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. **MCS** நிறுவனத்தில் **BIT** கற்கைநெறியில் இணைந்து கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டதாரி ஆகுவதுடன் **Microsoft, Cisco, Oracle, BCS ,IEEE** நிறுவனங்களின் அங்கத்துவத்தையும் பெற்று சிறந்த தொழில் வாய்ப்பை பெற முடியும். மேலதிக விபரங்களை 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள **MCS ITCAMPUS** நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். .தொலைபேசி இலக்கம் 772395895 (சி/2872)


## அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளன.

1. யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை (வகை:1AB)
2. யாழ்/ இணுவில் மத்திய கல்லூரி (வகை:-1C)
3. யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம் (வகை:II)
4. யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தி (வகை:II)
5. யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை(வகை:III)
6. யா/அளவெட்டி தெற்கு றோ.க.த.க.பாடசாலை (வகை:III)
7. யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை (வகை:III)
8. யா/அராலி முருகமூர்த்தி வித்தி (வகை:III)

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

- ✔ வகை I AB பாடசாலைக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து அல்லது தெரிவுகள் இடம்பெறாத விடத்து இலங்கை அதிபர் சேவை தரம் 2-I கவனத்தில் கொள்ளப்படும்.
- ✔ வகை 1C பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் I இலங்கை அதிபர் சேவை தரம் 2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து அல்லது தெரிவுகள் இடம்பெறாதவிடத்து இலங்கை அதிபர் சேவை தரம் 2-II கவனத்தில் கொள்ளப்படும்.
- ✔ வகை II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 2-I இலங்கை அதிபர் சேவை தரம் 2-IIஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து அல்லது தெரிவுகள் இடம்பெறாதவிடத்து இலங்கை அதிபர் சேவை தரம் III கவனத்தில் கொள்ளப்படும்.
- ✔ வகை III பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 2- II இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து அல்லது தெரிவுகள் இடம்பெறாதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் I கவனத்தில் கொள்ளப்படும்.

**குறிப்பு:**

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை *20.04.2013* ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**செ.சந்திரராஜா,**

**வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.** (சி/2874)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'4"<br>கி.பா: 65.75, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L, BSc (Spe), தாதி உத்தியோகத்தர்<br>தொ.இ: B -1523 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 3<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: MBBS Doctor Internal முடித்துள்ளார்<br>தொ.இ: G -1575 |
| பிறப்பு: 1979 இந்து (சிவகோத்திரம்)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: Data Entry (தனியார்) கனடா PR<br>தொ.இ: B -1542 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'5"<br>கி.பா: 32, 8 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L, UK Student Visa<br>தொ.இ: G-1577 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 1<br>உயரம்: 5'7"<br>கி.பா: 63, 4 இல் செவ்<br>தகைமை/ தொழில்: பட்டதாரி (HNDA) (பிரான்ஸ் Not PR) Student Visa<br>தொ.இ: B -1544 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>உயரம்: 5'6"<br>கி.பா: 56<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1579 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்,<br>12 இல் செவ்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L எழுதுவினைஞர் (அரச)<br>தொ.இ: B -1546 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>உயரம்: 4'11"<br>கி.பா: 47<br>தகைமை/ தொழில்: A/L ஆங்கில ஆசிரியை<br>தொ.இ: G -1581 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடிய அறைகளும் இயங்காத வளிச்சீராக்கிகளும்



**கலாநிதி நா.சிவபாலன்**
**இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்**
**யாழ். பல்கலைக்கழகம்**

*(நேற்றைய தொடர்ச்சி)...*

**ஏனைய காரணிகள்**

ஒருவர் வினைத்திறனுடனும் கடமையாற்றுவதற்கு ஒட்சிசன்,காபனீரொட்டு என்பனவற்றின் அளவுகளுடன் வெப்பநிலை, நேரடி வெப்பம், ஈரப்பதன் மற்றும் காற்றோட்டம் என்பவையும் முக்கியமானவை.

இங்கிலாந்து நாட்டில் ஒருவர் வேலை செய்யக்கூடிய அதி குறைந்த வெப்பநிலை $16^0$ C (கடுமையான உடல் வேலைகள் இருந்தால் $13^0$C ) ஆகவும் அதிகூடிய வெப்பநிலை $30^0$ C ஆகவும் இருக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எமது நாட்டிலோ சாதாரணமாகவே பகல் நேர வெப்பநிலை $30^0$ C இற்கு அண்மித்ததாக இருக்கும்.

நாம் சுவாசிக்கும் போது வெளிவிடும் காற்று சூடானது என்பது உங்களுக்குத் தெரியும் AC இயங்காத, மூடிய அறை ஒன்றின் நிலையை இதன் விளைவையும் சேர்த்து எண்ணிப் பாருங்கள். ஒருவர் வேலை செய்யும் இடத்தின் வெப்பநிலை குறைவாக இருந்தாலும் சூரியனின் கதிர்களோ அல்லது வேறு நெருப்பின் கதிர்களோ நேரடியாக ஒருவர் மீது விழுமாயின் அதுவும் அவரின் வசதியீனத்தை அதிகரிக்கும். திரைச்சீலைகள் மூலமாகவோ அல்லது இருக்குமிடத்தை மாற்றியோ இதனைக் குறைப்பது ஒருவரின் வினைத்திறனை அதிகரிக்க உதவும்.

எமது வினைத்திறனை பாதிக்கும் இன்னொரு காரணி ஈரப்பதன் ஆகும். இச்சொல்லின் கருத்தை விபரிக்க இக் கட்டுரையில் போதிய இடமில்லை. ஆனால், இது காற்றில் இருக்கும் நீராவியின் அளவைக் காட்டும் ஒரு அளவீடு என எடுத்துக்கொள்வோம்.

காற்றில் நீராவி அதிகளவில் இருந்தால் எமது வியர்வை ஆவியாவது குறைவடையும். இது புழுக்கத்தை அதிகரிக்கும். சுற்றிவர கடலினால் சூழப்பட்டு இருப்பதால் இது தொடர்பாக எம்மால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது. கடலினாலோ, நீர் நிலையினாலோ சூழப்பட்டிருப்பது வெப்ப நிலையை பெரிதாக அதிகரிக்கவிடாது. வெப்பத்தை நீர் பெற்று ஆவியாவதே இதன் காரணம். இது ஒரு நன்மை. ஆனால், புழுக்கம் அதிகரிப்பது ஒரு வசதியீனம்.

AC இயங்காத, மூடிய அறை ஒன்றில் சுவாசத்தின் மூலமாகவே காற்றில் நீராவியின் அளவு அதிகரிக்கும். அங்கு பணி செய்வோரின் ஆறுதல் குறையும்.

இதனைக் குறைப்பதற்கு வழி எமது கட்டடங்களில் காற்றோட்டத்தை அதிகரிப்பதாகும். காற்றோட்டத்தை அதிகரிக்கும் போது வெப்பக் கதிர்கள் நேரடியாக உள் நுழைவதைத் தவிர்க்க வேண்டும். காற்றோட்டத்தின் திசை பார்த்து ஜன்னல்களை அமைக்கும் அதேவேளை, வெப்பக் கதிர்கள் நேரடியாக உள் நுழையக்கூடிய பகுதிகளில் திரைச்சீலைகளையோ அல்லது சுவர்களில் சிறிய பருமனில் பல ஓட்டைகளை வைக்கும் முறையையோ கையாள வேண்டும். (யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதான இடமொன்று சமீபத்தில் இத்தகைய கரிசனைகளுடன் அமைக்கப்பட்டிருப்பதை பலர் அவதானித்திருப்பீர்கள்.)

மேலே தெரிவித்த சூழல் வசதியீனங்கள் உள்ளபோது பொருத்தமான ஆடையும் ஒருவரின் உள்ளமைதியை அதிகரிக்க உதவும்.காற்றோட்டத்தை அனுமதிப்பதனாலும் வியர்வையை உறிஞ்சுவதன் மூலம் அது ஆவியாகக்கூடிய மேற்பரப்பை அதிகரிப்பதனாலும் பருத்தி ஆடைகள் கூடிய ஆறுதலைத் தரும்.

ஜன்னல்கள் மூடப்பட்ட சுமார் 50 பேர் பயணம் செய்யும் பேருந்து ஒன்றில் AC இயங்காவிடில் மனித உடலுக்கு வரும் கேட்டை எண்ணிப் பாருங்கள். இதற்குள் தொற்றக் கூடிய நோய்க்கிருமிகளும் இருந்தால்? (முற்றும்)

## தேசிய மட்டத்தில் மூன்றாமிடம்

(பூநகரி)



பூநகரி ஞானிமடம் அ.த.க. பாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவி சதீஸ்கரன் சயந்தா சமூக விஞ்ஞானப் போட்டியில் கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முதல் இடங்களைப் பெற்றுக் கொண்டார்.

தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். (அ-2-84)

## சிகை அலங்கரிப்பு நிலையம் திறக்கப்படும்

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு நாளை மறுதினம் முதல் 14 ஆம் திகதிவரை வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் தொழில் நிலையம் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் எதிர் வரும் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை இரவு நேர கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க செயலாளர் அ.அல்பேட் அறிவித்துள்ளார். (அ)

## நட்புறவு சுற்றுலா

(பூநகரி)

வடக்கு, தெற்கு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கிடையில் நட்புறவை ஏற்படுத்துமுகமாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் வடபகுதியைச் சேர்ந்த இளைஞர்களை தெற்குக்கு அழைத்துச் செல்லும் சுற்றுலா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் இச்சுற்றுலாவில் முழங்காவில் - பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த 60 இளைஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இச்சுற்றுலாவிற்கான நிதி உதவியை "பொன்டோ" நிறுவனம் வழங்கவுள்ளதாக பூநகரிப் பிரதேச தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் தெரிவித்துள்ளார்.(அ-2-84)

## வலய மட்ட எழுத்தாக்க போட்டி முடிபுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ்மொழி தினப் போட்டியின் ஓர் அங்கமாகிய எழுத்தாக்கப் போட்டியின் வலயமட்ட முடிவுகளினை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

**கட்டுரை பிரிவு I**

இ.கஜானி (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்), யோ.லாவண்யா (மு/அனிஞ்சியன்குளம் த.வி), த.கிருபாளினி (மு/கல்விளான் குளம் அ.த.க பாடசாலை).

**பிரிவு II**

கு.லதாஜி (மு/நெட்டாங்கண்டல் அ.த.க பாடசாலை), பா.நிஹ்லா (மு/முத்தையன் கட்டு இடது கரை அ.த.க பாடசாலை), வ.கயூரங்கன் (மு/யோகபுரம் ம.வி).

**பிரிவு III**

செ.கமலினி (மு/தேறாங்கண்டல் அ.த.க பாடசாலை), , ந.கலைவர்ணன் (மு/நெட்டாங்கண்டல் அ.த.க பாடசாலை), ந.டிலக்க்ஷிகா (மு/மல்லாவி மத்திய கல்லூரி).

**கட்டுரை வரைதலும்இலக்கிய நயத்தலும்**

**பிரிவு IV**

உ.சமித்தா (மு/யோகபுரம் ம.வி), அ.கஜானி (மு/பாண்டியன்குளம் ம.வி), ர.ஜீவிதா (மு/ஒலுமடு த.வி).

**பிரிவு V**

க.சாரங்கா (மு/பாண்டியன்குளம் ம.வி), ம.கேதுஜா (மு/முத்தையன் கட்டு வலதுகரை ம.வி), பா.சாதுஜா (மு/யோகபுரம் ம.வி).

**சிறுகதை ஆக்கம்**

**பிரிவு IV**

சு.சுகிர்தன் (மு/முத்தையன் கட்டு இடது கரை அ.த.க.பாடசாலை), ஸ்ரீ.துவாரகா (மு/பாண்டியன்குளம் ம.வி), யோ.கஜனுயா (மு/யோகபுரம் ம.வி).

**பிரிவு V**

வி.சுஜனா (மு/கற்சிலை மடு அ.த.க பாடசாலை), சி.கஜானா (மு/பாலிநகர் ம.வி), பு.நர்மதா (மு/மாங்குளம் ம.வி).

**கவிதை ஆக்கம்**


**பிரிவு IV**

ந.நிந்துஜா (மு/பாலிநகர் ம.வி), ஜெ.கயல்விழி (மு/நெட்டாங்கண்டல் அ.த.க பாடசாலை), பா.மதுஷா (மு/மாங்குளம் ம.வி).

**பிரிவு V**

அ.றோஜிதா (மு/பாலிநகர் ம.வி), க.கயீனா (மு/ஐயங்கன்குளம் அ.த.க பாடசாலை), ப.தனோஜா (மு/மாங்குளம் ம.வி).

(அ-3-15)



பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 22 மத்தியஸ்தர் குழு உறுப்பினர்களுக்கான 5 நாட்கள் கொண்ட பயிற்சி இடம்பெற்று நிறைவு நாள் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி நீதி அமைச்சின் பயிற்சி இணைப்பாளர் பி.தெமட்டகொட தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டவர்களைப் படத்தில் காணலாம். (படம்:- பூநகரிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால்பிடிக்கும் வேலையைக் கச்சிதமாய் செய்து வருபவர் சுப்பிரமணிய சுவாமி

## தமிழகத்தை விட்டு விரட்டக் கோருகிறார் வேலுச்சாமி

கிராமத்தில் திரியும் கோயில் மாடு மாதிரி இலங்கைக்கு ஆதரவாக திரிந்து கொண்டிருக்கும் சுப்பிரமணியசுவாமியை தமிழகத்திலிருந்து அடித்து துரத்துவது தமிழர்களின் கடமை. அவரை நாடு கடத்தவேண்டும் என்று தமிழின உணர்வாளர்கள் வலியுறுத்த வேண்டுமென தமிழக காங்கிரஸ் பிரமுகரும் சுவாமியின் முன்னாள் நெருங்கிய நண்பருமான திருச்சி வேலுச்சாமி கூறியுள்ளார்.

நக்கீரன் வாரமிருமுறை இதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசுக்கு வால்பிடிக்கும் வேலையை கச்சிதமாக செய்பவர் சுப்பிரமணியசுவாமி. புலிகள்... புலிகள் என்று சொல்லி 91 இல் கருணாநிதி ஆட்சியைக் கலைக்க வைத்தவர் இவர். அப்போது ஜெயலலிதாவிற்காக அதைச் செய்தார். இப்போது அந்த ஜெயலலிதா அரசையே இலங்கை அரசிற்காக கலைக்கச் சொல்கிறார். ஜெயலலிதாவா? கருணாநிதியா? என்றால் ஜெயலலிதா என்பார் சுப்பிரமணிய சுவாமி. ஜெயலலிதாவா? மகிந்த ராஜபக்சவா? யார் முக்கியம்? என்று கேள்வி எழுந்தால் ராஜபக்ச பக்கமே கைதூக்குவார் இந்த அரசியல் தரகர்.

அப்படியிருக்க இலங்கை அரசுக்கு எதிராக ஜெயலலிதா நடந்து கொண்டால் அண்ணன் சுப்பிரமணியசுவாமி சும்மா இருப்பாரா? அதனால்தான் ஒட்டுமொத்த தமிழகமும் சிங்கள வீரர்களை ஐ.பி.எல்.போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கக்கூடாது என்கிறபோது இலங்கை அரசிற்காக வக்காளத்து வாங்குகிறார்.

தமிழகத்தில் இருப்பவர்கள் அரசியல் கோமாளிகள் என்று இலங்கையின் முன்னாள் இராணுவத் தலைமை தளபதி சரத்பொன்சேகா கூறியதற்கு தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர்கள் எல்லாம் துள்ளிக்குதித்தார்களே? இப்போ நம்மைப்பார்த்து பொறுக்கிகள் என்று சொல்கிற போது அந்த வீரமும் கோபமும் எங்கே போனது?

சுற்றுலாப் பயணிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்திய நிலையில் இலங்கைக்கு பகிரங்க ஆதரவு தரும் சுப்பிரமணிய சுவாமியின் சட்டையைப் பிடித்து நான்கு கேள்வி கேட்டிருக்க வேண்டாமா?

தமிழீழக் கோரிக்கைக்காக எல்லோரும் ஒரே நேர்கோட்டில் சிந்திப்பது எவ்வளவு அவசியமாக இருக்கிறதோ அதே அவசியமும் ஆவேசமும் தமிழினத்திற்கு எதிராக இலங்கை அரசுக்கு ஆதரவாக செயற்படும் சுப்பிர மணியசுவாமி போன்றவர்களை நாடு கடத்த வேண்டும் என்கிற கோரிக்கையிலும் இருக்க வேண்டும்.

அவர் ஒரு அரசியல் கோமாளி. அவருக்கு எதிராக போராடுவது வீண் என்று சிலர் சொல்வார்கள். ஆனால் அந்த ஒற்றைக் கோமாளி சர்வதேச அளவில் நம்மைக் காயடிக்கிறாரே நம்மால் என்ன பண்ண முடிந்தது.

கண்ணுக்குத் தெரியும் துரோகியைவிட கண்ணுக்குத் தெரியாத துரோகி மிகவும் ஆபத்தானவன் என்பார்கள். கண்ணுக்குத் தெரிகிற சுப்பிரமணிய சுவாமியே பயங்கரமான ஆபத்தானவராக இருக்கிறபோது அவருக்குப் பின்னால் மறைந்திருப்பவர்கள் எப்படிப்பட்ட ஆபத்தானவர்களாக இருப்பார்கள் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

இலங்கையிலுள்ள 75 சதவீத சிங்களவர்கள் இந்தியா வம்சாவளியினர். 12 சதவீதம் உள்ள தமிழர்கள் கிடையாது. அதனால் தமிழர்களுக்காக கவலைப்படுவதை விட்டுவிட்டு சிங்களத்தின் உரிமைகளை பாதுகாக்க இந்தியா அக்கறை கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம்? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்,

இது இலங்கைத் தூதரின் கருத்தல்ல. இதன் பின்னணியில் இருப்பது சுப்பிரமணியசுவாமியினுடையது. இவருக்கும் இலங்கைத் தூதருக்கும் நல்ல நட்பு உண்டு.

இலங்கை தூதர் வேறு, சுப்பிரமணிய சுவாமி வேறு என்று நினைக்கக்கூடாது. அதனால் அந்தக் கருத்தின் அடிப்படையிலான சிந்தனை சுப்பிரமணிய சுவாமியால் உருவாக்கப்பட்டவை என்றார் அவர். (அ-2)

# 110 இலட்சம் ரூபா செலவில் புதிய தபாலகம் நிர்மாணிப்பு

## அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்



(கிளிநொச்சி)

யுத்தப் பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதோடு மக்களின் தேவைகளும் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 110 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி பளை தபாலகத்தினை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரதேச மக்களுடைய நீண்டகால விருப்பத்திற்கு அமைவாக இன்று இந்தத் தபால் நிலையம் திறக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இத்தபால் நிலையம் தற்போது வழமை போன்று தனது சேவையினை வழங்கும் . இருந்தும் எதிர்கால தேவைகருதி அது தரமுயர்த்தப்படும். அத்தோடு கடந்தகால யுத்தத்தினால் அழிந்துபோன கட்டடங்களை மீள அமைப்பதோடு மக்களின் தேவைகருதி புதிய கட்டடங்களும் அமைக்கப்பட்டு பிரதேசத்தின் அபிவிருத்திகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். மேலும் இங்கு மக்களுக்கு அதிகமான தேவைகள் உண்டு. அவையும் படிப்படியாக எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யப்படும்.

கடந்த காலத்தில் இந்தப் பிரதேச மக்கள் வாழமுடியாத ஒரு நெருக்கடியான சூழலுக்குள் இருந்தனர். ஆனால் இன்று அந்த நிலைமை முற்றாக மாற்றப்பட்டுள்ளது. எனவே இந்தச் சூழலில் இருப்பதனைப் பாதுகாத்து இல்லாதவற்றை கோரிப்பெற்றுக்கொள்ளும் முயற்சிகளிலேயே ஈடுபடவேண்டும். மாறாக யதார்த்தத்திற்குப் புறம்பாக கோரிக்கைகளை முன்வைத்து இருக்கின்ற நிலைமைகளை மோசமாக்கி பிரச்சினைகளை தீராப்பிரச்சினையாக மாற்றும் நடைமுறைகளுக்கு இடம்கொடுக்காது செயற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பளை பிரதேசசபையின் தலைவர் டொமினிக் அன்ரன், பளை பிரதேச செயலர் சத்தியசீலன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி மற்றும் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் மேலதிக பணிப்பாளர் றொபேட் பீரிஸ், அதன் கிளிநொச்சி மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் விஜயகிருஸ்ணன், வடமாகாண பிரதி தபால்மா அதிபர் இரத்தினசிங்கம், யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் புஸ்பநாதன், வவுனியா , கிளிநொச்சி, முல்லைத்தீவு, பிரதேச தபால் அத்தியட்சகர் திருமதி சல்காது, கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செல்வம் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

## பிரம்மோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு வராஹிபுரம் திருவருள் மிகு ஸ்ரீ வராஹி அம்பாள் தேவஸ்தான திவ்ய பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழா நடைபெறும்.

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (அ-2)

## மஹோற்சவம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட உருத்திரபுரம் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று மாலை 5 மணிக்கு சாந்தி, வாஸ்டசாந்தி முதலிய பூர்வாங்க கிரியைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதுவருடத்தன்று காலை 6 மணிக்கு அபிடேகம் நடைபெற்று 9.05 மணிக்கு தேர் உற்சவம் நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை காலை 9.15இல் இருந்து 11.15 வரை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-3-254)

# விசுவமடு மகா வித்தி. மைதான விஸ்தரிப்பு

மு/விசுவமடு மகாவித்தியாலயத்தின் தற்போதுள்ள மைதானத்தை விஸ்தரித்து 400மீற்றர் ஓடு பாதைகள் கொண்ட மைதானமாக மாற்றப்படவுள்ளது.

இதற்கான செயற்பாடு எதிர்வரும் 7 திகதி ஞாயிற்றுக்கிழமை பாடசாலை அதிபர் பெ. பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் விசுவமடு கிராமத்தின் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களும் இராணுவத்தினரும் இணைந்து இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

தற்போது.இந்த மைதானம் 200 மீற்றர் ஓடுபாதைகளைக் கொண்ட மைதானமாக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கடற்பரிசோதகர் அலுவலகத்திற்கு தனியான கட்டடம் கிடையாது

## முல்லை. மீனவர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்பரிசோதகர் அலுவலகம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக கடற்தொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதில் கொக்கிளாய் (கொக்கிளாய் கடல் நீரேரி), நாயாறு (நாயாறு கடல்நீரேரி), முல்லைத்தீவு வடக்குநந்திக்கடல் நீரேரி), முல்லைத்தீவு நகரம் (முல்லைப்பெருங்கடல்) ஆகிய கடல் நீரேரிகளில் கடற்பரிசோதகர் அலுவலகம் தேவைப்படுகின்றபோது ஒரு நீரேரியில் கூட கடற்பரிசோதகர் அலுவலகம் இல்லாது இருப்பது வேதனை அளிக்கின்றதென கடற்தொழிலாளர்கள் தெரி விக்கின்ற னர்.

கடற் பரிசோதகர் அலுவலகம் இன்மையால் முல்லைத்தீவு நீரியல்வள துறை கடற்தொழில் திணைக்களத்திலேயே இயங்கி வருகின்றது.

இவ்வாறு இவ் அலுவலகம் இன்மையால் சட்டவிரோதமாக இடம்பெறும் கடற்தொழில் செயற்பாடுகளை உடனுக்குடன் அறிவிக்க முடியாத நிலையுள்ளது. இதனை சட்டவிரோதமாக கடற்றொழிலில் ஈடுபடுவோர் தப்பித்து விடுகின்றனர்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இவ் அலுவலகம் அமைத்துக் கொடுக்கப்பட்டபோதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்படாதுள்ளமைக்கான காரணம் என்ன? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aayanaham.org

## ஏ.ரி.எம்.அட்டை மோசடி; இலங்கையர் இருவர் கைது

(கொழும்பு)

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் ஏ.ரி.எம்.அட்டை மோசடியில் ஈடுபட்ட இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதான இரண்டு பேருமே விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று தாய்லாந்தின் அதிகாரிகள் அந்த நாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

அவர்களுடன் மேலும் நான்கு மலேசிய நாட்டு பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் அங்கு சுமார் ஒரு கோடி ரூபாய் வரையில் மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

## பொதுக்கூட்டம்

(கைதடி)

வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

இதில் பங்கு கொள்ள விரும்புவோர் நிகழ்வின் ஏற்பாட்டாளர் செ. சுரேந்திராவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## தொழிற்துறை முயற்சி முதலீட்டு வழிகாட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தொழிற்துறை முயற்சிகளில் முதலீடு செய்பவர்களுக்கான தொழிற்துறை முயற்சி முதலீட்டு வழிகாட்டி கைநூல் இலங்கை முதலீட்டுச் சபையின் வடமாகாணக் காரியாலயத்தில் (கண்டி வீதி, யாழ்ப்பாணம்) இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என சபையின் சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர் ஆர்.ஜெயமோகன் அறிவித்துள்ளார்.

இந்நூல் கைத்தொழில்துறைசார் தொழில் முயற்சிகள், விவசாயத்துறைசார் தொழில் முயற்சிகள், சுற்றுலாத்துறைசார் தொழில் முயற்சிகள்; கல்வித்துறைசார் தொழில் முயற்சிகள், தகவல் தொழில்நுட்பம்சார் தொழில் முயற்சிகள், பொது வசதிகள்சார் தொழில் முயற்சிகள், அடிப்படைக் கட்டுமானம்சார் தொழில்முயற்சிகள், சேவைகள் மற்றும் ஏற்றுமதிச் சேவைகள்சார் தொழில் முயற்சிகள் போன்ற துறைகளில் தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கும் ஈடுபட ஆர்வம் உள்ளவர்களுக்குமான வழிகாட்டியாக இந்நூல் அமைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மத முரண்பாடுகள் குறித்து பிரித்தானியா கவலை

(கொழும்பு)

இலங்கையில் நிலவி வரும் மத முரண்பாடுகள் குறித்து பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது.

புத்தரின் உருவத்தை அண்மையில் உடலில் பச்சை குத்திய பிரித்தானிய பிரஜையொருவர் நாடு கடத்தப்பட்டார். விருந்தோம்பல் பண்பில் பிரபல்யம் பெற்ற இலங்கையில் தற்போது மத முரண்பாட்டு நிலைமைகள் வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் ரொபீ புலொச் தெரிவித்துள்ளார்.

நாடுகளுக்கு விஜயம் செய்யும் பிரித்தானியர்கள் குறித்த நாடுகள் பற்றி அறிந்து கொண்டு அதற்கு ஏற்ற வகையில் தங்களது பயணங்களை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

நாடுகள் தொடர்பில் பயண விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## ஒப்பந்த அடிப்படையிலான செயற்றிட்ட உதவியாளர் பதவி வெற்றிடங்கள்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் ஒப்பந்த அடிப்படையிலான செயற்றிட்ட உதவியாளர்களுக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருப்பதுடன் நூலகத்துறையில் அனுபவம் வாய்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்க முடியும் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-5)

## பொங்கல் விழா

(தும்பளை)

புலோலி மேற்கு வாணர் குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-3-19)

## அரசின் அபிவிருத்தியில் குருவிகளும் மீன்களுமே பிடிக்கப்படுகின்றன

### அசாத் சாலி கிண்டல்

மத்தள மஹிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் குருவிகளும் மஹிந்த ராஜபக்ச சர்வதேச துறைமுகத்தில் மீன்களுமே பிடிக்கப்படுவதாக தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பு பான்ஸ் பிளேஸில் அமைந்துள்ள அசாத் சாலி மன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டை உலக நாடுகளிடம் கடன் எடுத்து அபிவிருத்தி செய்வதாக அரசாங்கம் கூறித்திரிகின்றது. ஆனால் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சர்வதேச துறைமுகத்தில் மீன்களும் சர்வதேச விமான நிலையத்தில் குருவிகளுமே பிடிக்கப்படுகின்றன. இது மிகவும் வேடிக்கையாக உள்ளது.

இந்நிலையில் உலக நாடுகளிடமிருந்து பெற்ற கடனுக்கு நாட்டு மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. நல்லவிதமான அபிவிருத்திகளும் இல்லை. ஒவ்வொரு நாட்டுப் பிரஜையும் கடனாளியாக்கப்பட்டதோடு பிறக்கின்ற குழந்தைகளும் கடனாளியாக்கப்படுவது தான் மிச்சம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## போட்டிகளுக்கு விண்ணப்பிக்க காலம் நீடிக்கப்பட்டுள்ளது

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை ஒட்டி நடத்தப்படும் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளிற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தூது தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு விழாக் குழுவின் போட்டி செயலர் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை குறித்த திகதிக்கு முன்னர் இணைப்பாளர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டுவிழா, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப் போட்டிகள் மே மாத நடுப் பகுதியில் இடம்பெறவுள்ள நிலையில் மேற்படி விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி இன்றுடன் முடிவடையும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த திகதியினுள் விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைப்பதில் பாடசாலைகளுக்கு இருந்த சிரமங்களை கருத்திற் கொண்டு மேற்படி இறுதித்திகதி நீடிக்கப்பட்டுள்ளது. (அ-2-5)

## புத்தாண்டை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

புத்தாண்டை முன்னிட்டு கொழும்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொழும்பு மற்றும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவோரிடமிருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட ரோந்துப் பணிகள் மற்றும் திடீர் சோதனைகளின் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. புத்தாண்டு கொண்டாட்டங்கள் நிறைவடையும் வரையில் தொடர்ச்சியாக மாலை நேரங்களில் விசேட ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சிவில் உடையிலும், சீருடையிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சனநெரிசல் அதிகமாகக் காணப்படும் பிரதேசங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-2)

## பொதுபலசேனாவின் குற்றச்சாட்டை அமைச்சர் ஹக்கீம் நிராகரித்தார்

(கொழும்பு)


இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் எம். எச். எம் .அஸ்ரப் இரண்டு ஆயுதக் கப்பல்களை கொண்டு வந்ததாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் சுமத்தும் குற்றச்சாட்டு அஸ்ரப்பிற்கு செய்யும் அவமதிப்பு என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். பொதுபலசேனா அமைப்பு அண்மையில் பாணந்துறையில் நடத்திய பொதுக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அஸ்ரப் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

போர் நடைபெற்ற காலத்தில் இரண்டு கொள்கலன்களில் ஆயுதங்களை கொண்டு வந்ததாகவும் அந்த ஆயுதங்கள் தற்போது எங்கே இருக்கின்றன எனவும் ஞானசார தேரர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாக தெரிவித்துள்ள ஹக்கீம் அதனை வன்மையாக கண்டிப்பதாகவும் கூறியுள்ளார்.

அஸ்ரப் என்பவர் நாட்டுக்கு சேவையாற்றிய உன்னதமான தலைவர்களில் ஒருவர். அவருக்கு எதிராக சுமத்தப்படும் இந்த குற்றச்சாட்டு காரணமாக முஸ்லிம் சமூகம் கவலையடைந்துள்ளதாகவும் ஹக்கீம் கூறியுள்ளார். (அ-2)





யாழ்.எயிட் நிறுவனத்தினரால் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி மாணவர்களுக்கு உதவிகள் அண்மையில் வழங்கப்பட்ட போது... (மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

05



## யமுனா ஏரியும் அரசகேசரி மண்டபமும்


மன்னர் தொடர்ந்தார்:

"யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆரியச்சக்கரவர்த்தி விசயகாலிங்க ஆரியச்சக்கரவர்த்தியாவார். நாட்டின் பிரதிநிதியாக புவனேகபாகு என்பவன் இருந்தபோது தென்னிலங்கையிலிருந்து கலிங்கத்து மாகன் வடக்கு நோக்கி துரத்தப்பட்டான். அவனை விசயகாலிங்கன் என்ற பெயரோடு புவனேகபாகு முதலாவது ஆரியச்சக்கரவர்த்தியாக்கினான். இவனை சிங்கை நகரிலிருந்த யாழ்ப்பாண நல்லூருக்கு மாற்றினான். யாழ்ப்பாண நகரியைக் கட்டுவித்து கந்தவேளுக்குக் கோயிலும் எடுப்பித்தான். இவனை அடு



செங்கை ஆழியான்

த்து குலசேகர சிங்கையாரியன் மன்னனானான். இவன் ஆட்சியை சீர்படுத்தியதோடு சமாதானத்தைப் பேணினான். இவன் மகனான குலோத்துங்க சிங்கையாரியன் வயல் நிலங்களைத் திருத்தி வருமானத்தை அதிகரித்தான். இவன் பின்னர் மன்னனான விக்கிரம சிங்கையாரி யன் காலத்தில் தமிழருக்கும் சிங்களவருக்கும் சமயச் சண்டை ஏற்பட்டது. இரு தமிழர் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர்.



சங்கிலியன் கோட்டை கல்வெட்டு

அதனால் மன்னன் சிங்களவர் பதினெட்டுப் பேரை கொல்வித்தான் இவன் மகன் வரோதய சிங்கையாரியன் காலத்தில் இவ்விரு சமூகங்களிடையே சமாதானம் நிலவியது. அடுத்து ஆண்ட மார்த்தாண்ட சிங்கையாரியன் காலத்தில் கல்வி சிறப்புற்றது. குணபூசண சிங்கையாரியன் காலத்தில் செல்வம் பெருகியது இவனது மகனான விரோதய சிங்கையாரியன் காலத்தில் சிங்களவராற் கலகமுண்டானது. இக் கலகத்திற்கு வுன்னியர் காரணமாயினர். உண்மையறிந்து வன்னியரை அடக்கினான். இவன் பாாண்டியனுக்கு படை உதவி செய்துள்ளான். செயவீர சிங்கையாரியன் காலத்தில் முத்துச் சலாபம் குறித்துக் கண்டி இராசன் புவனேகபாகுவுடன் சண்டை பிடிக்க நேர்ந்தது. வெற்றிகொண்டான். குணவீரசிங்கையாரியன் தகப்பன் போலவே வீரன். தென்னிலங்கை மன்னனை வென்று திறை வாங்கினான். குணவீரசிங்கையாரியனின் மகனே எனது தந்தை கனகசூரிய சிங்கையாரியர். எனது தந்தை, காலத்தில் கோட்டை அரசன் பராக்கிரமபாகு என்பவனின் படையெடுப்பு நிகழ்ந்தது. ஆரியச் சக்கரவர்த்திகள் மீது தென்னிலங்கை மன்னர்களுக்கு மாறாக பகைமையிருந்தது. ஆரியச் சக்கரவர்த்திகள் பலவற்றாலும் புகழ் பெற்றவர், எனது கொள்ளுப் பாட்டனார் செயவீர சிங்கையாரியர் ஆவார். அவர் கம்பளை மீது படையெடுத்து கம்பளை மன்னன் புவனேகபாகுவையும் றயிகமத்திலிருந்த மந்திரி அழகக்கோனாரையும் வென்று தனது வெற்றியை கம்பளைக்கு அருகேயிருக்கும் கோட்டகமத்தில் கல்வெட்டாகப் பொழிப்பித்தான். செயவீர ஆரியச்சக்கரவர்த்தியின் வெற்றியைப் பொறுக்க முடியாத கோட்டையரசன் பராக்கிரமபாகு, என் தந்தை கனகசூரிய சிங்கையாரியன் காலத்தில் தனது வளர்ப்பு மகன் சப்புமல்குமரய தலைமையில் பெரும் படையொன்றினை யாழ்ப்பாணத்தின் மீது அனுப்பினான். அவன் நகரத்தைக் கைப்பற்றினான். இந்து சைவ ஆலயங் களை அழித்தான். நல்லூர் கந்தசாமி ஆலயத்தை அத்தி வாரத்தோடு கிளறிவித்தான். சப்புமல் குமரய என்ற செண்பகப் பெருமாளின் யுத்தத்தை எதிர்கொள்ள முடியாது கனகசூரியரும் நானும் தம்பி செகராசசேகரனும் முக்கிய அரச குலத்தவரும் தென்னிந்தியாவிற்கு திருக்கோவிலிற்கு பட கேறித் தப்பித்தோம். யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த வசதி படைத்தவர்களும் ஓடினார்கள். அன்றே நான் அறிவித் தேன்..."

என்னவென்று? இராஜலக்குமிதேவி கேட்டார்.

"நாங்கள் அரசைக் கைப்பற்ற படையுடன் திரும்பி வருவோம். இப்போது சிங்களப் படையைக் கண்டு புலம் பெயர்பவர்கள் ஓடட்டும். சமாதானமும் அமைதியும் இந்த நாட்டிற்கு திரும்பிய பின்னர் இவர்கள் தாய் நாடென்று திரும்பி வரக் கூடாது."

"வந்திருக்க மாட்டார்கள். அங்குள்ள சொர்க்க வாழ்வை விட்டு திரும்புவார்களா?"

(தொடரும்)

---

# மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இப்படுகொலை-ஆய்வு

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பாக ஆராய்கின்ற புத்தகம் ஒன்றை வெளியிடவுள்ள பிரித்தானிய சட்டவாளரும் அனைத்துலக சட்டத்துறை பேராசிரியருமான பிலிப் சாண்ட்ஸ் என்பவருடன் ஊடகம் ஒன்று மேற்கொண்ட நேர்காணலின் விபரம் இங்கே தரப்படுகிறது. 2003ல் இடம்பெற்ற அமெரிக்காவின் ஈராக் படையெடுப்பானது அனைத்துலகச் சட்டத்தை மீறி மேற் கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கின்ற Lawless World என்கின்ற நூலின் ஆசிரியரும் சாண்ட்ஸ் ஆவார். இவர் தற்போது *மசிடோனியா* என்கின்ற பெயரை உபயோகப் படுத்துவது தொடர்பில் நீதிக்கான அனைத்துலக மன்றில் கிறீசுக்கு எதிராக *மசிடோனியா* சார்பாக வாதிட்டு வருகிறார்.

**கேள்வி:** மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை போன்ற சட்டச்சொற்கள் தொடர்பாக விபரிக்க முடியுமா?

பதில்; மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை ஆகிய இரண்டும் வேறுபட்ட இரு எண்ணக்கருக்களாகும். இவை இரண்டும 1940 களின் நடுப்பகுதியில் அனைத்துலக சட்டத்தின் பகுதியாக கொண்டுவரப் பட்டன. அதாவது இரண்டாம் உலக மகா யும்த்தம் முடிவடைந்தபின்னர் இவ்விரு எண்ணக்கருக் களும் அனைத்துலகச் சட்டத்தில் இணைக் கப்பட்டன். இவை அந்த நேரத்தில் நூரம்பேர்க் விசாரைணைகள் இடம் பெற்றுக்கொண்டிருந்தன. அந்த நேரத்தில் இவை இரண்டும் புதிய எண்ணக்கருக்களாகக் காணப்பட்டன. இந்த இரு எண்ணக்கருக்களின் தோற்றுவாய்கள் தொடர்பாக ஆராய்கின்றவிதமாக நான் தற்போது புதிய நூல் ஒன்றை எழுதி வருகிறேன்.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களுக்கும் இனப்படுகொலைக்கும் இடையில் அடிப்படையில் காணப் படும் வேறுபாடு பின்வருமாறு: மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் என்பது பெரும் எண்ணிக்கையில் பொதுமக்களைக் கொல்வதாகும். திட்டமிட்ட ரீதியில் மிகப் பெரும் எண்ணிக்கையில் பொது மக்களைக் கொல்கின்ற செயலா னது மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் என வரையறையறுக்கப்பட்டுள்ளது. இனப்படுகொலை என்பது வேறுபட்ட நோக்கத்தின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுகிறது. இனப் படுகொலை என்பது தனிப்பட்ட மக்களைக் கொல்வ தோடு மட்டுமல்லாது, ஒரு சமுதாயத்தை அழிப்பதை நோக்காகக்கொண்டு மேற்கொள்ளப்படுவதாகும்.

வேறுவகையில் கூறினால், தனியொரு குழுவைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் கொல்லப்படு வதையே இது குறிக்கின்றது. இந்த ரீதியில் இவ்விரு எண்ணக்கருக்களுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது. இந்த இரு எண்ணக்கருக்களில் ஒன்று, தனியொருவரைக் காப்பாற்றுவதை அடிப்படையாகக் கொண்ட சட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. மற்றையது ஒரு குழுவைக் காப்பாற்றுவதைக் கருத்திற் கொண்டு சட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

**கேள்வி:** Lviv என்கின்ற உக்ரேனிய நகரத்துடன் இவ்விரு எண்ணக் கருக்களையும் தொடர்புபடுத்தி நீங்கள் ஆராய்ச்சியை மேற் கொண்டு வருவதாகக்கூறப்படுவது உண்மையா?

பதில்: 1945 மற்றும் 1946 களில் கூட்டணி நாடுகள் நூரம் பேர்க் விசாரணைகள் தொடர்பாக தம்மை தயார்ப்படுத்திக் கொண்டிருந்த வேளையில், மனிதாபி மானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகிய இரு வேறு எண்ணக்கருக்களும்புதிதாக அனைத் துலகச் சட்டத்தில் இணைக்கப் பட்டன. இதனால், இவை இரண்டும் மிகப் பிரபலமாகப் பேசப்பட்டன. இந்த விசாரணையில் தமக்கெதிரான நாசி ஆதரவு நாடுகளை எவ்வாறு குற்றம் சுமத்த முடியும் என்பது தொடர்பாக கூட்டணி நாடுகள் ஆராய்ந்து தீர் மானம் எடுத்தன. அந்த வேளையில், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படு கொலை விவகாரத்தைக் கையாள முடியுமா? அல்லது இல்லையா? என்பது தொடர்பாக மிகப்பெரிய விவாதம் ஒன்று எழுப்பப்பட்டது. இந்த அடிப்படையில், கூட்டணி நாடுகள் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற எண்ணக்கருவை தமது விவாதத்தில் பயன்படுத்தின.

இவ்விரு எண்ணக்கருக்களின் தோற்றுவாய்கள் தொடர்பாக நான் எனது புதிய நூலில் ஆராய்ந்து வருகிறேன். லெம்பேர்க் மற்றும் ல்வொவ் (Lemberg and Lwow) ஆகிய இரு உக்ரேனிய நகரங்களைச் சேர்ந்த இருவர் இந்த எண்ணக்கருக்கள்



தோற்றம்பெறுவதற்குப் பொறுப்பாளிகளாவர். இவ்விரு நகரங்களும் தற்போது Lviv என அழைப் படு கிறது.

Lviv என்கிற இந்த நக ரானது மேற்கு உக்ரேனிய புறநகர்ப்பகுதியில் போலந்து நாட்டின் எல்லைக்கருகில் அமைந்துள்ளது. இது குறிப் பிடத்தக்க சாதனைகளைக் கொண்ட நகரமாகும். இங்கு பிரசித்திபெற்ற பல்கலைக் கழகம் ஒன்று உள்ளது. இது அமெரிக்காவின் *ஹவார்ட்* பல்கலைக் கழ கத்தைவிட பழமையான பல் கலைக்கழகமாகும். இப் பல் கலைக்கழகம் கணிதத்துறையில் பெயர்போன ஒன்றாகும்.


அத்துடன் இது சட்டத்துறைக்கும் பிரசித்தி பெற்றதாகும். இந்த சட்டப் பாடசாலையில் 1915 தொடக்கம் 1925 வரையான காலப்பகுதியில் இரு மனிதர்கள் கல்வி கற்றனர். இவர்களில் ஒருவர் Hersch-lauterpacht ஆவார். இவர் தனது சட்டக் கல்வியை முடித்த பின்னர் இங்கிலாந்தில் உள்ள கெம்ப்றிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அனைத் துலக சட்டத்துறைப் பேராசிரியராக கடமையாற்றினார். இப் பேராசிரியரே நூரம்பேர்க் விசாரணை தொடர்பான பட்டயத்தில் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற எண்ணக்கருவை உட்புகுத்தியதற்கு பொறுப் பாளி யாவார். இவர் இந்த எண்ணக் கருவை உட்புகுத்தி சில ஆண்டுகளின் பின்னர் **Raphaellemkin** என்ற பிறிதொருவர் 1943 இல் இனப்படுகொலை என்ற பதத்தை அறிமுகப்படுத்தினார். இவ்விரு சட்டத்துறை வல்லுனர்களும் உக்ரேனிலுள்ள ஒரே சட்டக் கல்லூரியிலேயே கற்றனர் என்பது என்னை ஆச்சரியப்படுத்தியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்ல நாள், நேரம் என்ன செய்யும்?



ராமனும் கோவிந்தனும் பக்கத்து வீட்டுக்காரர்கள். ஒருநாள் ராமன் கோவிந்தன் வீட்டுக்கு வந்து அவனிடம் எனக்கு நகரத்திற்குச் சென்று ராமசாமி என்ற ஆளைப் பார்க்க வேண்டும். அவன் எனக்குப் பணம் தரவேண்டும். நீயும் வருகிறாயா? இன்றே செல்வோமா என்றான்.

உடனே கோவிந்தன் அவசரமாகச் சென்று பஞ்சாங்கத்தை எடுத்துப்புரட்டிப் பார்த்து விட்டு அடடே! இன்று நாள் நன்றாக இல்லை! இன்று போனால் காரியம் நடக்காது. நாளைக்கு அமிர்தயோகம்! நாளைக்கே போகலாமே! எனக்கும் நகரத்தில் வேலை இருக்கிறது என்றான். கோவிந்தன் எதற்கெடுத்தாலும் நாள் நட்சத்திரம் பார்ப்பவன்! ராமன் அப்படிப்பட்டவனில்லை. மிக முக்கியமான காரியங்களுக்கு மட்டுமே நல்ல நாள் பார்ப்பவன்! பேசாமல் கோவிந்தனிடம் சொல்லாமல் அன்றே போய்விடலாமா என்று நினைத்தான். பின்பு கோவிந்தன் தவறாக நினைப்பான் என்று அந்த யோசனையைக் கைவிட்டான்.

## அம்புலிமாமா கதைகள்

மறுநாள் ராமனும் கோவிந்தனும் நல்லநேரம் பார்த்து வீட்டை விட்டுப் புறப்பட்டனர். தெருமுனையில் குருநாதன் வருவது தெரிந்தது. உடனே கோவிந்தன் அவசரமாக ராமனின் சட்டைக் கொலரைப் பற்றி உள்ளே இழுத்து அவன் பார்வையில் படவேண்டாம். உள்ளே வா! என்றான்.

ராமனுக்கு காரணம் புரியவில்லை. உடனே கோவிந்தன் அதில்லையடா! அந்த ஆள் லொடலொடவென வாய் ஓயாமல் பேசுவான். பார்த்தவுடனேயே எங்கே போகிறாய்? என்று அபசகுனமாகக் கேட்பான். அப்புறம் நாம் போகும் காரியம் விளங்கின மாதிரித்தான் என்றான்.

சேச்சே! அவனைப் பார்த்துப் பேசினால் ஏதாவது உபயோகமான தகவல் கிடைக்கும்.



ஏனென்றால் அவன் எல்லா விடயங்களையும் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பவன் என்றான் ராமன்.

சரி சரி விடுடா! உலக விடயம் தெரிந்து என்ன ஆகப் போகிறது என்ற கோவிந்தன் பின்பு ராமனுடன் புறப்பட்டான். நகரத்திற்குச் சென்று ராமசாமியின் வீட்டை அடைந்த ராமனுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.

ராமசாமி ஊரில் இல்லை என்றும் அன்று காலை புறப்பட்டவன் வருவதற்கு இரண்டு நாள் ஆகும் என்றும் தெரிய வந்தது. நான் முன்னமே திட்டமிட்டபடி முதன்நாளே புறப்பட்டிருந்தால் ராமசாமியைச் சந்தித்து பணம் கேட்டிருக்கலாமே என்று தோன்றியது. பணம்கூட கிடைத்திருக்கலாம்.

பின்பு கோவிந்தன் ராமனை அழைத்துக்கொண்டு கடைத் தெரு சென்றான் அன்று ஏதோ ஒரு பிரச்சினைக்காக கடைகள் அனைத்தும் மூடப்பட்டு இருந்தன. இருவரும் மிகவும் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினர். வயிற்றை பசி கிள்ளியதால் ஒரு சிறிய உணவு விடுதிக்குச் சென்றனர்.

அவர்களிடம் வந்த சப்ளையர் உங்களுக்கு சைவ உணவா? அல்லது அசைவ உணவா? என்றான். உடனே தலையில் பலமாக அடித்துக் கொண்டு எழுந்த கோவிந்தன் ஈஸ்வரா! ஈஸ்வரா! கர்மம்! கர்மம்! என்றவன் சப்ளையரைப் பார்த்து தனக்கு தனியாக மேசை, கதிரை போடும்படியும் வாழையிலையில் சுத்தமான சைவ சாப்பாடு போடும்படியும் சொன்னான். ராமனையும் பார்த்து அவன், டேய்! நீயும் இங்கு வா! அங்கு உட்கார்ந்தால் கண்ட கண்டதையும் உன்னுடைய தட்டில் போட்டுவிடுவான் என்று விளக்கெண்ணெய் குடித்தவன் போல் முகம் சுளித்தான். ஆனால் ராமன் போடா! நான் இங்கேயே உட்கார்ந்து கொள்கிறேன் எனக்குப் பரவாயில்லை என்று சொல்லிவிட்டான்.

பின்பு ராமனும் சைவ உணவு உண்டான். உணவு உண்டபின் இருவரும் உணவு விடுதியை விட்டு வெளியே வந்தனர். கோவிந்தனுக்கு ராமன் செய்தது துளிகூடப் பிடிக்கவில்லை. நீ அசைவ உணவு சாப்பிடுபவர்களோடு உட்கார்ந்து சாப்பிட்டிருக்கக்கூடாது. சேச்சே தப்பு! தப்பு! நீ செய்தது தப்பு என்று தலையை பலமாக ஆட்டினான்.

தனியாக உட்கார்ந்து உணவு உண்டதால் மட்டும் என்ன பிரயோசனம் கோவிந்தா? அசைவ உணவு பரிமாறிய அதே கரண்டியினால் தான் எனக்கும் பரிமாறினான் உனக்கும் பரிமாறினான் என்று ராமன் சொல்லவே உவ்வே உவ்வே என்று வயிற்றையும் கழுத்தையும் பிடித்துக் கொண்டு கோவிந்தன் வாந்தி எடுப்பது போல் தவித்தான்.

உடனே ராமன் கோவிந்தா! நமக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்! ஒழுங்கு முறையாக நாம் நேற்றே புறப்பட்டிருந்தால் நான் ராமசாமியை சந்தித்து பணம் வாங்கியிருப்பேன்.

கடைகள் திறந்திருக்கும். உன் வேலையும் முடிந்திருக்கும். நாள் நட்சத்திரம் பார்த்துப் புறப்பட்டு ஒருவேலையும் ஆகவில்லை.

அட புறப்படும் போது அந்த குரு மூர்த்தியை சந்தித்துப் பேசி இருந்தால் உலக விடயங்கள் நன்கு தெரிந்த அவன் கடையடைப்பு பற்றியும் சொல்லி இருப்பான். நல்ல நாள் பார்த்து வந்தும் உனக்கு இந்த விடுதியில் அசைவ உணவுக் கரண்டியில் பரிமாறி விட்டார்கள் பார்த்தாயா? நாள் நட்சத்திரத்தை மட்டும் நம்பாமல் கொஞ்சம் விவேகத்துடன் செயற்பட வேண்டும். நாள் கோள் பார்ப்பதற்கும் ஓர் அளவு இருக்கிறது என்று பொரிந்து தள்ளினான்.

நீ சொல்வது சரிதான் ராமா என்ற கோவிந்தன் நான் இனி மேல் என்னை மாற்றிக் கொள்வேன் என்றான்.



அந்த உணவு விடுத்தியில் அசைவக் கரண்டியை கோவிந்தனுக்கும் பயன்படுத்தினர் என்று தான் பொய் சொன்னது கோவிந்தனைக் கலக்கி ஆளையே மாற்றிவிட்டது குறித்து ராமனுக்குத் திருப்தியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூதாகரமாகியது

SPAMHAUS

# CYBER ATTACK



இணைய உலகமானது இதுவரை கண்டிராத பரந்தளவிலான தாக்குதலுக்கு முகங்கொடுத்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். இது 'biggest cyber attack in history"வரலாற்றில் இடம்பெற்றுள்ள மிகப்பெரிய சைபர் தாக்குதல் என வர்ணிக்கப்படுகின்றது. Denial of Service attack எனப்படும் ஒரு கணினியோ அல்லது வலையமைப்போ அவை வழங்கும் சேவையை பயனாளிகள் பெறமுடியாத வகையில் முடக்க மேற்கொள்ளப்படும் சேவை மறுப்புத் தாக்குதலே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இது இணையத்தின் 'DNS Domain Name System' என்று பரவலாக அறியப்படும் களப் பெயர் முறைமையை பாதிக்கத் தொடங்கியுள்ளதாக தொழில்நுட்ப வல்லுநர்கள் விளக்கமளிக்கின்றனர்.

இத்தகையவொரு பரந்தளவிலான தாக்குதலை இதுவரை இணைய உலகம் கண்டதில்லை என ஆய்வாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதனால் உலகலாவிய ரீதியில் இணையத்தின் வேகம் நன்கு குறைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இரண்டு நிறுவனங்களுக்கிடையிலான மோதலே இதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

தேவையற்ற மின்னஞ்சல்களை 'Spam' தடுக்கும் நிறுவனமான Spamhausக்கும் , அத்தகைய மின்னஞ்சல்களை அனுப்புவதாக குற்றஞ்சாட்டப்படும் Cyberbunker க்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதலே தற்போது பூதாகரமாகஉருவாகியுள்ளது. 'Spamhaus' என்பது லண்டன் மற்றும் ஜெனீவாவைத் தளமாகக் கொண்ட தேவையற்ற மின்னஞ்சல்களை தடைசெய்யும் இலாப நோக்கற்ற நிறுவனமாகும். Cyberbunker என்பது ஹோஸ்டிங்(Hosting) நிறுவனமாகும். Spamhaus நிறுவனமானது போலியான பொருட்களுக்கு விளம்பரம் வழங்குதல் போன்ற (உதாரணம் வயகரா, எடைக்குறைப்பு மாத்திரைகள்) ஸ்பேம் மின்னஞ்சல்களை அனுப்புதல் போன்ற தீய நோக்கங்களுக்காக செயற்படுத்தப்படும் சேவர்களை பட்டியலிட்டுள்ளது.



இந்நிலையில் குறித்த நிறுவனமானது Cyberbunker நிறுவனத்தினையும் அப்பட்டியலில் உள்ளடக்கியுள்ளது. இதற்கு பதிலடி கொடுக்கும்முகமாக Cyberbunker நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கை தற்போது உச்சகட்டத்தை அடைந்துள்ளதாகவும் அது தற்போது அடுத்த கட்டத்துக்கு நகர்ந்துள்ளதாகவும் இதுவே இணையத்தின் வேகம் குறையக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு நிறுவனங்களுக்கிடையேயான மோதல் தற்போது இணைய உலகினையே ஆட்டிப்படைக்கத் தொடங்கியுள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். தற்போது இவ்விடயம் தொடர்பில் தீவிர விசாரணைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதனால் மில்லியன் கணக்கானோர் தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் வங்கிகளின் இணையம் சார்ந்த செயற்பாடுகள், மின்னஞ்சல் சேவை வழங்குநர்களின் செயற்பாடுகள் விரைவில் பாதிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் தொழில்நுட்ப வல்லுநர்கள் திண்டாடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## தனிமனித பாவனைக்கு அதிநவீன சாதனம்


போக்குவரத்துக்கு உரிய மோட்டார் வாகனங்களை தயாரிப்பதில் பெயர்பெற்ற கொரியாவைச் சேர்ந்த Hyundai நிறுவனமானது தனி மனிதர்கள் பயணம் செய்யக்கூடிய E4U எனப்படும் அதிநவீன சாதனம் ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளது.

உயர் தொழில்நுட்பம் மற்றும் விசேட வடிவமைப்பு என்பனவற்றினை உள்ளடக்கியதாக உருவாக்கப்படும் இச்சாதனமானது எந்தவொரு திசையிலும் பயணிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

மேலும் இவற்றில் இரண்டு சக்கரங்கள் காணப்படுவதுடன் அவை டயர்கள் அற்றவையாகவும் வடிவமைக்கப் பட்டுள்ளன.



## பசியைத் தூண்ட....



உடல் இளைக்க உதவும் விதமான உடலில் பொருத்தவல்ல மைக்ரோசிப் மின்னணுக் கணனிச் சில்லு ஒன்றை தாங்கள் உருவாக்கியுள்ளதாக ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்தச் சில்லுகள் உடலில் பொருத்தப்பட்டவருக்கு அதிகம் பசிக்காது என்பதால் அறுவை சிகிச்சை செய்து உடல் எடையைக் குறைப்பது போன்றவற்றுக்கு மாற்றாக இந்த முறை அமையும் என்று இதனை வடிவமைத்தவர்கள் தெரிவிக்கின்றனர். மூளைக்கு பசியை உணர்த்துவதிலும் உடலின் வேறு பல வேலைகளைக் கட்டுப்படுத்துவதிலும் உதவுகின்ற வேகஸ் நர்வ்ஸ் எனப்படும் நரம்பிலே சேர்ந்திருப்பதுபோல இந்தச் சில்லு உடலில் பொருத்தப்படும். விலங்குகளிடத்தில் இந்தக் கண்டுபிடிப்பைப் பயன்படுத்திப் பார்க்கும் பரிசோதனைகள் ஆரம்பிக்கவுள்ளன.

அதன் பின்னர் மூன்று ஆண்டுகளில் மனிதர்களிடத்திலும் இவை பரிசோதிக்கப்படும் என்று இது சம்பந்தமான ஆய்வுகளைச் செய்துவரும் லண்டன் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் கிறிஸ் டூமாஸ் மற்றும் பேராசிரியர சர் ஸ்டீஃபன் ஆகியோர் கூறுகின்றனர். வேகஸ் நரம்புகளில் பொருத்தப்பட்ட இந்தச் சில்லுகள் பசி தொடர்பான இரசாயன அறிகுறிகளை புரிந்துகொள்ளும் என்றும், அதிகமான பசியை உணர்த்தாத வகையில் மூளைக்கு மின்னணு சமிக்ஞைகளை அனுப்பும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அளவாகவும் மெதுவாகவும் சாப்பிடவைப்பது போல இந்த சில்லுகள் மூலம் மூளைக்கு சமிக்கைளை அனுப்பமுடியும் என்று பேராசிரியர் டூமாஸ்" பிபிசியிடம் தெரிவித்தார். காக்காய் வலிப்பைக் கட்டுப்படுத்துவதில் உதவக்கூடிய வகையில் வேகஸ் நரம்புகளில் பொருத்தப்படும் மைக்ரோசிப் சில்லுகளை இதே இம்பீரியல் காலேஜ் ஆராய்ச்சியாளர்கள் ஏற்கனவே உருவாக்கியிருந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

## InFocus இன் புதிய படைப்பு

InFocus எனப்படும் இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று பல அம்சங்களைக் கொண்டதும் 55 அங்குல அளவுடையதுமான விண்டோஸ் 8 இயங்குதளத்தினைக் கொண்ட கணனியினை விற்பனைக்கு விட்டுள்ளது.

Intel i5 Processor - ஐ கொண்டுள்ள இவை முற்றிலும் தொடுதிரை செயற்பாட்டினைக் கொண்டதாகவும் வயர்லெஸ் முறை மூலம் இயக்கக்கூடிய சுட்டி, விசைப் பலகை போன்ற வசதிக்ளை கொண்டுள்ளதாகவும் காணப்படுகின்றன.

அத்துடன் 120GB சேமிப்பு கொள்ளளவையும் உடையதா கக் காணப்படும் இக்கணனிகளின் விலையானது 4,999 டொலர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகளை வழங்கும் விஜய வருட பலன்கள்

**ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்**

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**பணவரவு அதிகரிக்கும்!**

**ருசிகரமாகப்பேசி மற்றவர்களை ரசிகர்களாக மாற்றும் இடப இராசி நேயர்களே!**

“விஜய” வருடம் உங்களுக்குப் பணத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஆண்டாகவே அமைகிறது. வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு மாற்றங்களைப் பெறுவீர்கள்.

வருடத் தொடக்கம் உங்கள் இராசியிலேயே பிறக்கிறது. அதுமட்டுமல்ல, உங்களுக்கு யோகம் செய்யும் சனி வக்ரத்தில் இருந்தாலும், உச்சம் பெற்று விளங்குகிறார். எனவே, உத்தியோகம், தொழில் போன்றவற்றில் எதிர்பார்த்த நற்பலன்களும், உதிரி வருமானங்களும் பெருகும். மேலும், குருச்சந்திர யோகம் இருப்பதால் அமைதியான வாழ்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள்.

விரய ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் பலம் பெற்றிருக்கிறதே என்று பயப்பட வேண்டாம். 6 இல் இராகு அஷ்டலட்சுமி யோகத்தை உங்களுக்கு வழங்கும். வருடத் தொடக்கத்தில் ஜென்ம குரு என்பதால் பயணங்கள் அதிகரிக்கலாம். வைகாசி மாதத்திற்குப் பின்னர் கொடுக்கல்-வாங்கல்களும் ஒழுங்காகும். வங்கி சேமிப்பு உயரும்.

**பிறருக்காகப் பாடுபடும் குணம் உள்ளவர் நீங்கள்!**

காளைச் சின்னம் உங்கள் சின்னம் என்பதால் உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் பெற்று பிறரைக் கவர்ந்திழுப்பவர்களின் பட்டியலில் முதலிடம் வகிப்பீர்கள். கடவுள் நம்பிக்கை ஆழமாக இல்லாவிட்டாலும் வாழ்வின் பிற்பகுதியில் ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

சுக்ர பலத்தைப் பொறுத்தே உங்களுக்கு வாழ்க்கைத்துணை அமையும். எனவே, பத்துப்பொருத்தங்களில் முக்கிய நான்கு பொருத்தங்கள் இருந்தால்தான் குடும்பத்தில் ஒற்றுமையும் கொடுக்கல்- வாங்கல்களில் திருப்தியும் ஏற்படும்.

**நந்தன வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11.52 மணிக்கு தனுசு லக்னம், கார்த்திகை நட்சத்திரம் ரிஷப இராசியில் அமிர்த யோகத்தில், விஜய வருடம் பிறக்கிறது.**

**விருப்பங்கள் நிறைவேறும்!**

வருடத் தொடக்கம் அஷ்டலட்சுமி யோகத்தோடு தொடங்குகிறது. இருந்தாலும், சனி வக்ர நிவர்த்தியான பிறகுதான் சஞ்சலங்கள் தீரும். சந்தோஷங்கள் கூடும். ஆண்டின் தொடக்கத்தில் தனாதிபதி அஸ்தமனமும் பெற்று, நீச்சமும் பெற்றிருக்கிறார். வருடத்தின் மையப்பகுதியில் சுக்ரன் வக்ரமும் பெறுகிறார். சுக்ரன் வக்ரம்பெறும் நேரத்தில் தங்கம், வெள்ளி சேமிப்பு நினைக்க இயலாத அளவு உயரும். நிதி நிலையும் கூடும்.

விஜய ஆண்டின் தொடக்கத்தில் அமைந்த கிரக நிலைகளும் பின்னர் வரும் குருப்பெயர்ச்சியால் வரும் மாற்றங்களும் குரு, சனி ஆகியவற்றின் வக்ர இயக்க காலத்தில் ஏற்படும் மாற்றங்களும், செவ்வாய்- சனி பார்வை காலங்களும் உங்களுக்குத் தாக்குதல்களைத் தருமா? அல்லது வாழ்வைத் தூக்கி நிறுத்துமா? என்பதை தெளிவாகத் தெரிந்துகொண்டு செயற்படுவது நல்லது.

வளர்ச்சிக்கு வழிகாட்ட நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர். எந்த காரியங்களில் எந்தெந்த மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறீர்களோ, அந்தந்த மாற்றங்கள் உரிய நேரத்தில் வந்து சேரும். தன வரவு தாராளமாக வந்து சேரப்போவதால் இனத்தார் பகை மாறும். மருத்துவ செலவுகள் குறையும். உடல்நிலையும் தேறும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கு வழி பிறக்கும்.

**தமிழ்ப் புத்தாண்டு கிரக பலன்**



குரு மாற்றம் உங்களுக்கு குதூகலத்தை வரவழைத்துக் கொடுக்கும். ஆதாயம் அதிகரிக்கும். அருகில் இருப்பவரோடு ஏற்பட்ட பகை மாறும். உத்தியோக சம்பந்தமாக நீங்கள் எடுத்த முடிவில் மறுபரிசீலனை செய்வீர்கள். ஊர் மாற்றம் செய்யலாமா? அல்லது உத்தியோகத்தை விட்டு வேறு துறைக்குப் போகலாமா? நாடு மாற்றம் செய்யலாமா? நமக்கு நிம்மதி எதில் கிடைக்கும்? என்று யோசித்து கடந்த சில மாதங்களாகக் குழப்பத்தில் இருந்தவர்களுக்கெல்லாம் நல்ல மாற்றம் வந்து சேரப்போகின்றது.

பதவி உயர்வு, சம்பள உயர்வு, உத்தியோக உயர்வு போன்றவைகள் எளிதில் வந்து சேரலாம். பெண் பிள்ளைகளின் பூப்புனித நீராட்டுவிழாக்கள், திருமண விழாக்கள், பூர்வீக சொத்துக்களில் வீடு கட்டும் வாய்ப்பு, புதிய கோவில்களுக்குத் திருப்பணி செய்தல் போன்றவைகள் எல்லாம் ஒவ்வொன்றாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

சந்திரனின் உச்சத்தோடு வருடம் தொடங்குவதால் விலகிச்சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேர்வர். கலகம் விளைவித்தவர்கள் விலகுவர். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க வகையில் புதிய பதவிகள் வந்து சேரும்.

**பம்பரமாய் சுழன்று பணிபுரிய வைக்கும் மிதுன குரு!**

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த குருபகவான் வைகாசி மாதம் 14 ஆம் திகதி (28-05-2013) அன்று மிருகசீரிட நட்சத்திரம் 3 ஆம் பாதத்தில் மிதுன இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். அதன் பார்வை பலம் உங்கள் இராசிக்கு 6,8,10 ஆகிய இடங்களில் பதிவாகிறது. இதன் விளைவாக ஆரோக்கியம் சீராகும். பம்பரமாய் சுழன்று பணி புரியச் செய்யும்.


பொதுவாக 2 ஆம் இடம் எனப்படும் தன ஸ்தானத்திற்குச் செல்லும் குருவை வரவேற்க நாம் முன்னதாகவே சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். கவலைகள் தீர வேண்டுமானால் கவசங்கள் பாடி, முல்லைப் பூமாலை அணிவித்து வழிபாடு செய்தால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். குருவின் பார்வை எதிர்ப்பு, கடன், வழக்கு, உடல்நிலை, இடமாற்றம், தொழில் மாற்றம் போன்ற அனைத்திலும் மனதிற்கு பிடித்த விதத்தில் மாற்றங்களை செய்யும்.

இதுவரை சங்கிலித் தொடர்போல் வந்த கடன்சுமை குறைந்து, மற்றவர்களுக்கு நீங்கள் கொடுத்து உதவி செய்யும் விதத்தில் வாழ்க்கைத்தரம் உயரப்போகிறது. உத்தியோக உயர்வு, அல்லது ஊதிய உயர்வு ஆகியவை நீங்கள் எதிர்பார்த்தபடி அமையும்.

8 ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். ரண சிகிச்சை செய்தால்தான் குணமடையலாம் என்று சொன்ன மருத்துவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் சாதாரண சிகிச்சையிலேயே சகல வியாதிகளும் பறந்து போகும். எதிரிகள் உங்களை விட்டு விலகுவர். தொழில் பங்குதாரர்கள் தொல்லை ஒயும்.

குருவின் பார்வையால் உங்கள் தொழில் ஸ்தானம் புனிதமடைவதால் புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் ஒருசிலருக்கு உருவாகும். கூட்டாளிகளை மாற்றம் செய்து கூடுதல் லாபம் பெற முயற்சிப்பீர்கள். ஏமாற்றமும் இழப்பும் ஈடுசெய்யும் விதத்தில் லாபங்கள் வந்து சேரும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

# இடபம்



கூட்டாளிகளை விலக்கிவிட்டு குடும்ப உறுப்பினர்களை தொழில் பங்குதாரர்களாக ஆக்கிக்கொள்ள விரும்புபவர்கள், அவர்களது ஜாதகத்தை ஆராய்ந்து யார் பெயரில் தொழில் செய்தால் லாபம் தடையின்றி வந்து கொண்டே இருக்கும் என்பதை அறிந்து கொள்வது நல்லது.

**மந்தன் சனியால் வரும் மாற்றங்கள்!**

சனி 6 ஆம் இடத்தில் உச்சம் பெற்றும் வருடத் தொடக்கத்திலேயே வக்ரம் பெற்றும் சஞ்சரிக்கின்றார். 14.04.2013 முதல் 04.07.2013 வரையிலும் மீண்டும் 01.03.2014 முதல் 13.04.2014 வரை சனி வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் சனி, செவ்வாயின் பார்வை காலம் ஏற்படுகிறது. இதுபோன்ற காலங்களில் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவதுதான் நல்லது.

உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குகிறார். எனவே, சனி வக்ர காலத்தில் சொத்துப் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். தந்தைவழி உறவில் அனுசரிப்பு குறையும். தொழில் கூட்டாளிகளால் நெருக்கடி வரும். எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது.

செவ்வாய், சனியின் பார்வை காலத்தில் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். குடும்பசுமை கூடும். பழைய வண்டி வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்க முன்வருவீர்கள். நீண்டதூர பயணங்களால் ஏற்றம் பெறுவீர்கள். காகத்திற்கு சோறிட்டு வருவதோடு ஒற்றை சனீஸ்வரர் வீற்றிருக்கும் ஆலயங்களுக்குச் சென்று உள்ளம் உருகி வழிபட்டால் வெற்றிச் செய்திகள் வீடுவந்து சேரும்.

**குரு, செவ்வாயின் வக்ர காலம்!**

13.11.2013 முதல் 12.03.2014 வரை குரு மிதுனத்தில் வக்ரம் பெறுகிறார். 8,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குகிறார். அஷ்டமாதிபதியாக இருந்து குரு வலிமை இழப்பது யோகம்தான். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப திடீர் மாற்றங்கள் தித்திக்க வைக்கும்.

திட்டமிடாது செய்கின்ற காரியங்களில் வெற்றி கிடைக்கும். அரசு வழி சலுகைகள் வந்து சேரும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய அசுர குரு வழிபாட்டையும் தேவகுரு வழிபாட்டையும் முறையாக மேற்கொள்ளுங்கள.

செவ்வாயின் வக்ர காலமான 01.03.2014 முதல் 13.04.2014 வரை செலவுக்கேற்ற வரவு வந்து சேரும். இடம், பூமி விற்பனையால் கூடுதல் லாபம் கிடைக்கும். அந்நியதேச தொடர்பும் அடுக்கடுக்காக நற்பலன்களும் வந்து சேரலாம். அதே நேரத்தில் உங்கள் இராசிக்கு சப்தமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் வாழ்க்கைத் துணையை கொஞ்சம் அனுசரித்துச் செல்வது நல்லது. அங்காரக வழிபாடும், முருகப் பெருமான் வழிபாடும் அல்லல்நீக்கி, ஆனந்தம் வழங்கும்.

**பலன் தரும் பரிகாரம்!**

**வெள்ளிக்கிழமைதோறும் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். பொன், பொருட்கள் பெருகும். புதிய திருப்பங்கள் ஏற்படும். விருப்பங்கள் நிறைவேற சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வதோடு நந்தீஸ்வர வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.**

## ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்

**இடப இராசியில் பிறந்தபெண்களுக்கு விஜய வருடத்தில் விருப்பங்கள் நிறைவேறும். வீட்டு முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் இருந்த தடை அகலும். பக்கத்துவீட்டாரின் பகை மாறும். பாராட்டும் புகழும் கூடும்.**

**குருப்பெயர்ச்சிக்குப் பின்னர் குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகளும் மழலையின் ஓசை கேட்பதற்கான சூழ்நிலையும் உருவாகும். சனி, செவ்வாய் பார்வை காலத்தில் உடன்பிறப்புகளை அனுசரித்து செல்வது நல்லது. ஆரோக்கியத்திற்காகவும் சிறு தொகை செலவாகும்.**

**குடும்ப ஒற்றுமை பலப்பட எதையும் பெரியவர்களை கலந்து ஆலோசித்து செய்வது நல்லது. வருடக்கடைசியில் கடைசி மூன்று மாதங்களும் யோக லட்சுமியின் அருள் பரிபூரணமாகக் கிட்டும்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் கௌரவமாக வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும்

## சுஷ்மா ரணிலுக்கு எடுத்துரைப்பு

இலங்கையில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழக்கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். பௌதீக ஒருமைப்பாட்டுக்கு பங்கம் ஏற்படாத வகையில் அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் நம்பகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ் மக்கள் கௌரவமாக வாழக்கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் உரிய முறையில் அமுல்படுத்தத் தவறியுள்ளதாக ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளதாக தெரியவருகின்றது. மேலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்த எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தவறி யுள்ளதாக குறிப் பிட்டுள்ளார். (அ-2)

# பனைசார் உற்பத்தி பயிற்சி ஆசிரியர்கள் தாய்லாந்துக்கு

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பனைசார் உற்பத்தி பயிற்சி ஆசிரியர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி தாய்லாந்திற்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த பயணத்தில் தாய்லாந்தில் மேற்கொள்ளப்படும் புதிய வடிவங்களை பயின்று அவ்வடிவங்களை இலங்கையில் உருவாக்குவதற்காக இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் பனை அபிவிருத்தி சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பனை உற்பத்திகள் மற்றும் பனைசார் கைப்பணி பொருட்களின் புதிய வடிவங்களை வழங்குவதற்காக தாய்லாந்து அரசாங்கம் இணங்கியுள்ளது. அந்த வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 8 மாவட்ட பயிற்சி ஆசிரியர்களை அழைத்துச் செல்லவுள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்ட பயிற்சி ஆசிரியர்களே 5 நாட்கள் பயிற்சிக்காக பயணமாகவுள்ளனர்.

அதேவேளை பனை அபிவி ருத்தி சபை விரிவாக்கல்துறை முகாமையாளர் கோபால கிருஷ்ணன் மற்றும் சிறு சுவடு பணிப்பாளர் பவானி உட்பட பலர் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-2)

# சாவ. வர்த்தக சங்கத்தினரை அமைச்சர் டக்ளஸ் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர்களுடன் இணக்கப்பாடு எட்டும்வரையில் வர்த்தக நிலையங்களுக்கான வாடகையை கூடுதலாக அறவிடக்கூடாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் சாவகச்சேரி வர்த்தக சங்க நகரசபை மற்றும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள பிரதிநிதிகளுடனும் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட வியாபார நிலையங்களில் வாடகைப்பணம் அதிகளவில் அறவிடுவது தொடர்பில் வர்த்தகர்களால் எடுத்துக்கூறப்பட்ட போது இதுவிடயம் தொடர்பாக விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதுடன் இணக்கப்பாடு எட்டும் வரையில் வாடகைப் பணத்தை கூடுதலாக அறவிடக்கூடாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் நடமாடும் வியாபாரிகளால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப் படுவதாகவும் இதனைக் கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இம்மாத நடுப்பகுதியில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி வர்த்தகர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உரியதீர்வு கிடைக்க வழிசமைக்கப் படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா, ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் உடனிருந்தனர். (அ)

# பிள்ளையார் உற்சவம்

யாழ்.அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை நிறைவுபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு தேர்ப்பவனி ஆரம்பமாகவுள்ளது. மறுநாள் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறும். (அ-2)

# வெள்ளிக்கிழமைகளில் பற்சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் பல் வைத்திய அதிகாரியினால் இன்று வெள்ளிக்கிழமை முதல் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடமாடும் பற்சிகிச்சை நடத்தப்படவுள்ளது. பொதுமக்கள் இச்சேவையை பெற்றுக்கொண்டு பயனடையலாம் என யாழ்.பிராந்திய சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

# மாணவர்களுக்கான விசேட செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற க.பொ.த உயர்தர மாணவர்களில் தமிழ்ப் பாடத்தினை கற்கின்ற மாணவர்களுக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் 16,17,18,19 ஆகிய திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

மேற்படி மாணவர்கள் கல்விகற்கின்ற பாடசாலைகளுக்குரிய அதிபர்கள் இவ் அறிவித்தலை முன்கூட்டியே மாணவர்களுக்கு வழங்கி விடுமுறை காலத்தில் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் மாணவர்கள் தவறாது கலந்து கொள்வதற்குரிய அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்குமாறு அவர் பாடசாலை அதிபர்களை கேட்டுள்ளார். (அ-3-15)




★456-புனித பற்றிக் அயர்லாந்துக்கு மத தூதராக வந்தார்.

★1614-வேர்ஜீனியாவில் அமெரிக்கப் பழங்குடியினளான போக்கஹொண்டாஸ் ஆங்கிலேய குடியேற்ற வாதியான ஜோன் ரோல்ஃப் என்பவனைத் திருமணம் புரிந்தாள்.

★1654-ஆங்கில - டச்சுப் போரை முடிபுக்கு கொண்டு வரும் பொருட்டு வெஸ்ட் மினிஸ்டர் உடன்பாடு எட்டப்பட்டது.

★1792-அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன் முதற் தடவையாக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

★1804- முதற்தடவையாக விண்கல் ஒன்று வீழ்ந்தது ஸ்கொட்லாந்தில் பதிவானது.

★1879-பொலிவியா மற்றும் பெரு மீது சிலி போரை அறிவித்தது. பசுபிக் போர் ஆரம்பமானது.

★1897-கிரேக்கத்துக்கும் ஓட்டோமான் பேரரசுக்கும் இடையில் போர் ஆரம்பமானது.

★1930-மகாத்மா காந்தி அரபிக் கடலின் குஜராத் கடற்கரையோரப் பகுதியான தண்டியில் உப்புச் சட்டத்தை மீறி உப்பைக் கையிலே அள்ளி எடுத்து வந்து தனது 241 மைல் நடை பயணத்தை முடித்தார்.

★1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் போர்க்கப்பல்கள் இலங்கையைத் தாக்கின. இரண்டு பிரித்தானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

★1944-இரண்டாம் உலகப் போர்: கிளெய்சோரா என்ற கிரேக்க நகரில் 270 உள்ளூர் மக்கள் ஜேர்மனியினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★1945-பனிப்போர்: யோகொஸ்லாவியாவினுள் சோவியத் படைகள் தற்காலிகமாக நுழைவதற்கு அந்நாட்டு ஜனாதிபதி ஜோசப் டீட்டோ சோவியத் ஒன்றியத்துடன் உடன்பாடு செய்து கொண்டார்.

★1946- 11 மாதங்கள் ஆக்கிரமிப்பின் பின்னர் சோவியத் படைகள் டென்மார்க் தீவான போர்ன்ஹோல்மை விட்டு விலகின.

★1955-ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் பதவியிலிருந்து வின்ஸ்டன் சேர்ச்சில் விலகினார்.

★1956-பிடெல் காஸ்ட்ரோ கியூபாவின் ஜனாதிபதியுடன் போரை அறிவித்தார்.

★1956-இலங்கைப் பொதுத் தேர்தலில் எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையிலான கட்சி வெற்றி பெற்றது.

★1957-இந்தியாவின் கேரளா மாநிலத்தில் பொதுவுடைமைவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றினர். ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாத் முதலமைச்சரானார்.

★1964-பூட்டான் பிரதமர் ஜிக்மி டோர்ஜி சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1971-இலங்கை அரசிற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் நாட்டின் தென் பகுதிகளில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

★1976-மக்கள் சீனக் குடியரசில் தியனன்மென் சதுக்கத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட நிகழ்வு இடம் பெற்றது.

★1998-அக்காஷி- கைக்கியோ பாலம் உலகின் மிகப் பெரிய தொங்கு பாலம் ஜப்பானில் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★1929-Ivar Giaever, நோபல் பரிசு பெற்ற நோர்வே இயற்பியலாளர்

★1933-க.கைலாசபதி, தமிழ் இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர் (இ.1982)

### இறப்புக்கள்

★1967-ஹேர்மன் முல்லர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1890)

★1962-ஆனந்த சமரக்கோன், சிங்கள இசைக் கலைஞர், பாடலாசிரியர் (பி.1911)

★1992-சாம்வோல்ற்றன், அமெரிக்க விற்பனை நிறுவனம் வோல்மார்ட் நிறுவுநர் (பி.1918)

★2005-சோல் பெலோ, நோபல் பரிசு பெற்ற கனேடிய எழுத்தாளர் (பி.1915)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்பான...

# இந்திய வெளியுறவுக் கொள்கையும் எதிர்கொள்ளப்படும் சவால்களும்

**இந்தியாவின் ஜவகலால் நேரு பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் பேராசிரிய ரான பி.சகாதேவன் Deccan Herald ஆங்கில ஊடகத்தில் எழுதியுள்ள பத்தி**

தமிழ்நாட்டு அரசாங்கமும் அதன் எதிர்க்கட்சியும் இலங்கை தமிழர்களுக்கு நீதி மற்றும் உரிமையை அந்நாட்டு அரசாங்கம் வழங்க வேண்டும் என்பதை இந்திய மத்திய அரசிடம் வலியுறுத்தி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் இலங்கை மீதான இந்திய வெளியுறவுக் கொள்கையானது தமிழ்நாட்டில் அக்கினிப் பரீட்சையை எதிநோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான, விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி அமெரிக்கா தலைமையில் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் முன்வைக்கப் பட்ட தீர்மானத்தை இந்தியா பல்வேறு அழுத்தங்களின் பின்னர் ஆதரித்து வாக்களித்தது.

தமிழ் மக்களின் உணர்வுகளையும் அவர்களது நலன்கள் தொடர்பிலும் இந்தியா மத்திய அரசாங்கம் கரிசனை காட்டவில்லை என தமிழ் நாட்டில் வாழும் மக்களின் ஒரு சாரார் கருதுகின்றனர். இந்திய மத்திய அரசாங்கம், தமிழ்நாட்டு சட்டசபை தீர்மானத்தை ஏற்க மறுத்தமையானது இவ்வாறான எண்ணக்கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது. தமிழ்நாட்டு மக்களை திருப்திப்படுத்தும் அதேவேளையில், மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய வெளியுறவுக் கொள்கையை உருவாக்குவதென்பது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிக்கு அவ்வளவு சுலபமான காரியமல்ல.



இலங்கை மீதான தமிழ்நாட்டின் தற்போதைய நிலப்பாடானது அரசியல் மற்றும் இன உணர்வுகள் ஆகிய இரு காரணிகளை அடிப்படையாகக் கொண்டது. தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் மக்களின் உணர்வுகளை அரசியல் நலனுக்காக பயன்படுத்திக் கொள்கிறர்கள். இவ்விரு காரணிகளும ஒன்றோடொன்று தொடர்புபட்டதாகும். இவ்விரு காரணிகளும் சிங்களவர்களால் ஆளப்படும் இலங்கை அரசாங்கத்தின் இனவெறிக் கொள்கையை எதிர்ப்பதற்கு வலுவூட்டுகின்றன.

போரின் இறுதிக்கட்டத்தில் போர் வலயங்களில் அகப்பட்ட அப்பாவித் தமிழ்மக்கள் மீது இலங்கை இராணுவத் தால்தயவு தாட்சண்யமின்றி பல்வேறு மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அனைத்துலக சமூகமானது இலங்கை அரசாங்கம் மீது அழுத்தம் கொடுத்து வருகின்றன.

அத்துடன் இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் மீது போருக்கப் பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் பல்வேறு அடக்குமுறைகள் மற்றும் ஓரங்கட்டுதல்கள் தொடர்பாக அனைத்துலக சமூகம் தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளது. இந்நிலையில் இலங்கை அரசாங்கமானது தமிழ் மக்கள் தொடர்பில் கைக்கொள்ளும் இனவெறிக் கொள்கையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என தமிழ்நாடு தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகிறது.

இலங்கை ஜனாதிபதி ஏமாற்றக் கூடிய மூலோபாயங்களில் நம்பிக்கை கொண்டுள்ளார். இவ்வாறான நயவஞ்சகமான இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பை பேணுவதென்பது மிகக் கடினமானது என்பதை இந்தியா கண்டுணர்ந்துள்ளது. குறிப்பாக, அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் இலங்கையின் ராஜபக்ச அரசாங்கமானது இந்தியாவால் முன்வைக் கப்பட்ட அதிகாரப்பகிர்வு உடன்படிக் கையை ஏற்று நடப்பதை விரும்பவில்லை என்பது இந்தியாவுக்கு வருத்தமளித்தது. ஆனால், அதிகாரப்பகிர்வு தொடர்பில் இந்தியாவிடம் இலங்கை பல வாக்குறுதிகளை வழங்கியும் அவற்றை மேற்கொள்ளவில்லை. இலங்கையின் வெறுமையான இராஜதந்திர வாக்குறுதிகள் தொடர்பில் இந்தியா மேலும் ஆர்வம் காண்பிக்கவில்லை. இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்ததை, அதன் உள்நாட்டு அரசியல் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்கும் அவர்களின் அழுத்தங்களுக்கு பதிலளிப்பதற்கும் அப்பால் பார்க்கப்பட வேண்டும். இலங்கையை எதிர்த்து இந்தியா வாக்களித்ததானது, இலங்கை பல ஆண்டுகளாக தனது நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் இதயசுத்தியுடன் செயற்படத் தவறியதன் விளைவாக இந்தியா, இலங்கை மீது அதிருப்தி அடைந்ததன் வெளிப்பாடாகவும் பார்க்கலாம். இலங்கையில் அனைத்துலக சமூகத்தின் அழுத்தமானது உடனடி மாற்றத்தைக் கொண்டுவரும் என்பதை நம்பமுடியாவிட்டாலும்கூட, இலங்கையானது அனைத்துலக சமூகத்தின் நம்பகத் தன்மையை இழந்துவிட்டது என்பதும் உண்மையாகும்.

ஜெனீவாத் தீர்மானத்தின் பின்னான காலத்தில், இலங்கைத் தீவிலுள்ள கடும் போக்காளர்களிடமிருந்து இந்தியா மிகப்பெரிய எதிர்ப்புக்கு முகங் கொடுத்து வருகிறது. இலங்கை தீவில் வாழும் சிங்களத் தேசியவாதிகள், இலங்கைக்கு எதிராக வாக்களித்தவர்களை எதிர்த்து வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் மேற்குலகுடன் இணைந்து நிற்கும் அதேவேளையில் இந்தியாவும் மேற்குலகுடன் இணைந்து இலங்கைக்கு எதிராக செயற்படுவது போன்ற எதிர்மறை எண்ணக் கருத்து இலங்கையில் நிலவுகிறது. இவ்வாறான ஒரு இக்கட்டான சூழ்நிலையில், இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா இணைந்து செயற்படுவதைத் தவிர வேறு தெரிவுகள் காணப்படவில்லை.

ஆனால், நயவஞ்சகமான இலங்கை அரசாங்கம் நீதியுடனும், நேர்மையுடனும் நடக்கும் என எதிர்பார்க்க முடியாது. இதேவேளையில் இந்தியாவானது இலங்கை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டும் என்கின்ற அடிப்படைக் காரணியை கவனத்தில் எடுக்காதிருக்க முடியாது. குறைந்தது அடுத்த பொதுத் தேர்தல்கள்வரை இலங்கை விடயத்தை தமிழ்நாடு அவ்வளவு இலகுவில் கைவிடாது.

இலங்கை மீது பொருளாதாரத் தடையை விதித்தல், தமிழீழத்திற்கான கருத்துவாக்கெடுப்பை நடாத்துதல் போன்றன தொடர்பில் இந்தியா, ஐ.நா.வுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக்கோரி தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் இயற்றப் பட்டது. இலங்கையானது தன்மீதான வெளித்தரப்பின் அழுத்தங்களை உணர்ந்து அதிகாரப் பகிர்வை அடிப்படையாக்க கொண்டு அரசியற் தீர்வொன்றை எட்ட வேண்டும். அதே வேளையில், தன்மீதான போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைக்கு அனுமதி வழங்க வேண்டும். ஆனால், கெட்ட வாய்ப்பாக, இலங்கை அரசாங்கமானது இவ்வாறான எதனையும் விரைந்து செய்ய முன்வரவில்லை. இந்தச் சூழ்நிலையில், இலங்கை மீதான மேற்குலக நாடுகளுடன் இணைந்து இந்தியாவால் எடுக் கப்படும் நடவடிக்கைகள் பயனற்றுப் போய்விடும். இலங்கை மீது இந்தியா கடும்போக்கான நடவடிக் கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை என்பது உண்மையாகும். ஆனால், இலங்கையின் சீனாவுடனான உறவானது எதிர்பார்ப்பதுபோல் அவ்வளவு காத்திரமானதல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கும் அனைத்துலக சமூகத்தின் அழுத்தத்திற்கு முகங்கொடுப்பதற்காகவும் இலங்கை சீனாவுடன் நட்புறவை பேணிவருகிறது. இதேபோன்று சீனாவும் இலங்கையில் கேந்திர முக்கியத்துவம் மிக்க மூலோபாய நலன்களை அடைந்து கொள்வதற்காக நட்பைப் பேணி வருகிறது. இவ்விரு நாடுகளும் தமது வரையறைகளை நன்கு புரிந்து வைத்திருக்கின்றன. சீனாவானது இலங்கைக்கு பொருளாதார மற்றும் இராணுவ ஆதரவுகளை வழங்குவதற்கான நம்பகமான ஒன்றாக உள்ளபோதிலும், தேசிய உறுதிப்பாடு மற்றும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதில் சீனா, இலங்கைக்கு பயனற்றதாக இருக்கலாம்.

உள்ளக அரசியல் நடவடிக்கைகள் மூலம் மட்டுமே நாட்டில் சமாதானத்தையும் ஒழுங்கையும் ஏற்படுத்த முடியும். இந்நிலையில், இந்துமா கடல் பிராந்தியத்தில் அதிகாரம் மற்றும் செல்வாக்கை நிலைநிறுத்தி இந்தியாவுடன் சீனா போட்டி போடுவதற்கான மூலோபாய இடைவெளியை இலங்கை வழங்குவதற்கு முன்னர், இதன் பலவீனத்தையும், வலுவின்மையையும் இலங்கை புரிந்துகொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூ.மன்ற ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதில் அசமந்தப்போக்கு

## பிரதேச சபை தவிசாளர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிமன்றங்களில்நிலவும்ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு மாதங்களாகியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என யாழ்.மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள பிரதேச சபைகளின் தவிசாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிமன்றங்களில்நிலவும்ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அங்கீகாரம் ஆளணி ஆணைக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்தும் இன்றுவரை வடக்குமாகாணசபை செயலாளர் அதற்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் அவை சார்ந்த முழுமையான விபரங்களையும் தயாரித்து அங்கீகரித்து குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பிவைக்கவில்லை.

ஜனாதிபதியின் யாழ்.வருகையை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளணி சம்பந்தமான கேள்விகள் எதனையும் எழுப்பாத வகையில் எவ்விதமான தகவல்களும் பிரமாணக் குறிப்புக்களுமற்ற சுற்றறிக்கை ஒன்றினை உள்ளூராட்சி அமைப்பின் வடக்கு மாகாண செயலாளர் அனுப்பி வைத்தார்.இச் சுற்றறிக்கை ஆளணி நியமனங்களை மேற்கொள்வதற்கல்ல. சில இடர்பாடுகளை சமாளிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்ட ஒன்று என்பது எல்லோரும் அறிந்த உண்மை.நியமன அதிகாரம், தகைமைகள், சேவைப்பிரமாணக் குறிப்புக்கள் சம்பந்தமாக தமது அதிருப்தியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு மாகாண ஊழியர் நலன்புரிச்சங்கமும் சில பிரதேச சபைத் தலைவர்களும் வெளியிட்டனர். இது தொடர்பான கடிதங்களும் அனுப்பியிருந்தனர்.

ஆனால், இதுவரைக்கும் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி பெறப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்த பிரதேசசபைகளில் சேமிக்கப்பட்டுள்ளன.

கல்வித்தகைமைகள் மீள் பரிசீலனை செய்யப்படுகின்றன என்ற கடிதம் பெப்ரவரி மாதத்தில் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உள்ளூராட்சி அமைச்சின் வடக்குமாகாண செயலாளரால்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பு வெளியானதால் குறித்த நியமனங்கள் வழங்க முடியாமற் போய்விடும். எனவே, சேவைப் பிரமாணக் குறிப்பை வெளியிடுவதில் மாகாண சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசசபைகளின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல வருடங்களாக தற்காலிக, அமைய, வெளிவாரி அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றுபவர்களின் நிலையும் தொடர்ச்சியாக அவ்வாறே தான் உள்ளது.

வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தவர்களின் நிலையும் பரிதாபகரமானதொன்றாகவுள்ளது.

இவைதொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்கொள்ளும் இடர்களும் நீண்ட வண்ணமுள்ளன. மாகாணசபைத் தேர்தலையொட்டி அமைச்சரின் நியமன அறிவுப்புக்காக மாகாணசபை அதிகாரிகள் காத்திருப்பது போல் எண்ணத் தோன்றுகின்றது எனவும் பிரதேச சபைத் தவிசாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ-6)

# பேச்சுத்திறன் காணும் வைபவம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள 12 ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலைகள் இணைந்து வழங்குகின்ற தேனென இனிக்கும் மழலை மொழியிலான பேச்சுத்திறன் காணும் வைபவம் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் யாழ்ப்பாணம் பாலர் கல்விக்கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை அதிபர் திருமதி பரிமளம் பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (அ-2)

# நாகபாம்பு பெண்ணுக்கு பிடியாணை உத்தரவு

நாகபாம்பு பெண்ணுக்கு எதிராக பிடியாணை உத்தரவை கொழும்பு கோட்டை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

சந்தேக நபரான நிரோஷா விமலரட்ன என்ற பெண் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இரவு விடுதியொன்றில் சந்தேக நபர் நாகபாம்பு ஒன்றை வைத்திருந்தமை தொடர்பில் கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு எடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் பொலிஸ் கண்காணிப்பு பிரிவு அவசியம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் பொலிஸ் கண்காணிப்பு பிரிவினர் இல்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேறி மூன்று வருடங்கள் கடந்த நிலையில் இன்றுவரை பொலிஸ் கண்காணிப்பு பிரிவினர் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களில் 24 மணித்தியாலங்களும் இப் பொலிஸ் கண்காணிப்புப் பிரிவு இயங்குகின்றது.

வைத்தியசாலையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் முள்ளியவளை பொலிஸ்நிலையம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் 24 மணித்தியாலம் இயங்கக் கூடிய பொலிஸ் கடவை இயங்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(அ-3-267)

# புதுவருடத்தை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள்

## வடமாகாண வி. திணைக்களம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் திணைக்களத்தினால் புதுவருட கொண்டாட்ட விளையாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்காவில் நடத்தப்படவுள்ளது.

இவ்விளையாட்டு நிகழ்வுகள் மூன்று பிரிவாக நடைபெறவுள்ளன.

இதற்கமைய 10 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்கேற்கும் கீழ் பிரிவினருக்கான போட்டியில் தேசிக்காய் ஓட்டம், (மேசைக்கரண்டி கொண்டு வரவேண்டும்) பலூன் ஊதியடைத்தல், சாக்கோட்டம் ஆகிய விளையாட்டுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

திறந்த வயதுப் பிரிவினருக்கான மேற்பிரிவு போட்டிகளில்,மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் 10 கிலோ மீற்றரும் பெண்கள் 5 கிலோ மீற்றரும் ஓடுதல் வேண்டும், அத்துடன் இதில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகள் தங்களது மருத்துவ சான்றிதழ்களை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆண்களுக்கான போட்டிகளாக கிறீஸ் மரம் ஏறுதல், தலையணை சண்டைப்போர், தேங்காய் உடைத்தல் ஆகியவை இடம்பெறவுள்ளன.

பெண்களுக்கான போட்டிகளாக கிடுகு பின்னுதல்,தேங்காய் துருவுதல் ஆகியவை இடம்பெறவுள்ளன.

ஆண், பெண் இருபாலாரும் இணைந்து நடத்தும் போட்டிகளாக வேக நடை, முட்டி உடைத்தல், மெதுவான சைக்கிளோட்டம், முட்டைள ஏந்துதல் ஆகியவை இடம்பெறும்.

அணிகளுக்கான ஆண், பெண் இருபாலாரும் இணைந்து நடத்தும் போட்டிகளாக கபடி (காட்சி போட்டி) கயிறுழுத்தல் (அணிக்கு 11 பேர்) என்பன நடைபெறவுள்ளன.

எனவே, மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது பெயர் விபரங்களை விளையாட்டுத்திணைக்களம், வட மாகாணம், மருதனார் மடம் , சுன்னாகம் அல்லது கலாசார திணைக்களம், யாழ். வலய கல்வித் திணைக்களம், நல்லூர் என்ற முகவரிக்கோ அனுப்பி வைக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. (அ-2)

# வள்ளிபுனம் மயானம் புனரமைக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)


வள்ளிபுனம் மயானம் கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை புனரமைப்பு செய்யப்படாதுள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம்மயானமானது புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமானது.

மீள்குடியேற்றம் செய்து மூன்று வருடம் கடந்தும் எவ்வித புனரமைப்பும் இடம்பெறவில்லை.

வள்ளிபுனம், தேவிபுரம் இரண்டு கிராம சேவையாளருக்கும் உரிய இம் மயானத்திற்கு மின்சாரம் இல்லை, மண்டப வசதி இல்லை, கிணறு, மதில் இல்லை. பற்றைக்காடாக காணப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)



அச்சுவேலி புதிய பொலிஸ் நிலையம் திறப்பு விழா நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பீ.பி. இந்து கருணாரட்ன தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி.ஜி.எஸ். காமினி சில்வா பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதையும் நாடாவை வெட்டி புதிய கட்டடத்தை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்-எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டை கொண்டாடும் நிலையில் மக்கள் இல்லை

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டு பிறப்பு காலத்தில் பொதுமக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குவார்கள் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எதிர்வுகூறியுள்ளார்.

தற்போது வரி அறவீடு என்ற பெயரில் அத்தியாவசிய பொருட்கள் மீது பாரிய சுமை இறக்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனமகிழ்ச்சியுடன் புத்தாண்டை கொண்டாடுவதற்கான மனநிலையில் பொதுமக்கள் இல்லை. மக்களுக்கு நலனை வழங்க அரசாங்கம் எந்தவித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

இதேவேளை, அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக கட்சி நேற்று முன்தினம் தமது முதலாவது செய்தியாளர் சந்திப்பை நடத்தியது.

அதில் உரையாற்றிய கட்சித் தலைவர் சரத் பொன்சேகாவும் பொதுமக்களின் வாழ்க்கைச் செலவு குறித்து கருத்து வெளியிட்டார். நெருக்கடி நிலையை எதிர்நோக்கி வரும் பொதுமக்கள் தொடர்ந்தும் சிக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து இலங்கையின் பொருளாதாரம் பின்நோக்கியே சென்றுள்ளது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரமுன்னர் ஒரு குடும்பத்தின் மாதாந்த வாழ்க்கைச் செலவு 25 ஆயிரம் ரூபாவாக இருந்தது. தற்போது அது 45 ஆயிரம் ரூபாவாக மாறிவிட்டது.

இதேவேளை, தம்புள்ள பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் குருணாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஷாந்த பண்டார சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி தொடர்பில் இவ்வாறான கருத்தை வெளியிட்டார்.

தீப்பந்தம் குறித்த அரசாங்கம் அச்சமடையவில்லை என்றும் யானையை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குவதற்காகவே தீப்பந்தம் வந்திருக்கிறது.

வெற்றிலைக்கும் அரசாங்கத்திற்கும் அதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது. யானைக்கும் தீப்பந்தத்திற்கும் வாக்குகள் பகிரப்பட்டு அவர்களுக்கு இடையில் நெருக்கடி ஏற்படுவது திண்ணம் என்றார். (அ-2)

## வறியவர்களுக்கான கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

பேருந்து மற்றும் புகையிரத நிலையங்களில் நடமாடித் திரியும் மிக வறியவர்களுக்கான கொடுப்பனவு கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவினை அங்கு சென்று பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கான தலா மூவாயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் யாழ்.மாவட்ட செயலகம் சமுர்த்திக் கிளைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய அனுமுத்துகே செல்ரன் (850644500V), ஏ.ஏச்.எம்.சனும், வை.கர்மான்திரான் (791764696V), டபிள்யூ.செல்வக்குமார் (822353367V), கே.கிருஸ்ணகுமார் (832341266V), எல்.நிமல்சிறீ (573052595V), எஸ்.லெப்பை (640162163V), ஜே.மோகனதாஸ் (842950856V), ஜே.இராஜநேசன் ஆகியோரின் பெயர்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, உரியவர்கள் மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு சமுகமளித்து அடையாள அட்டையினைக் காண்பித்து தங்களுக்கான காசோலையினை பெற்றுக் கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உள்நாட்டு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய உள்நாட்டு பொறிமுறைமையின் மூலம் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தால் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சரியான உள்நாட்டு பொறிமுறைமை ஒன்றை அமைப்பதன் மூலம் சர்வதேச சமூகம் எழுப்பி வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியும்.

படைவீரர்கள் தங்களது உயிரைத் தியாகம் செய்து பாதுகாத்த நாட்டை இந்த அரசாங்கம் சீரழித்து வருகிறது.

நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் பாரியளவில் கடன் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் இதில் பாரியளவு நிதியை ஆளும் கட்சியினர் தரகுப் பணமாக பெற்றுக் கொள்கின்றனர்.

அதிக வட்டிக்கு பெற்றுக் கொள்ளப்படும் கடன்களில் 25 வீதமான பணம் இவ்வாறு தரகாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

நாட்டில் நிலவி வரும் அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும்.

கிரமமான முறையில் உள்நாட்டு ரீதியான விசாரணைகள் நடத்தப்பட்டால் சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க முடியும் என்றார். (அ-2)

# பரு.பிரதேச சபை உறுப்பினர் மீது நால்வர் தாக்குதல்

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் மீது நேற்றுக் காலை 10 மணியளவில் நான்கு பேர் கொண்ட குழு கடுமையாகத் தாக்குதலை மேற்கொண்டதுடன் தலையில் கத்தியால் வெட்டியும் காயப்படுத்தியுள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் தெற்கு பகுதியில் ஆலயத்துக்குச் சொந்தமான காணியை நான்கு பேர் கொண்ட குழு சேர்ந்து நில அளவை அதிகாரிகளின் உதவியுடன் ஆலயக் காணியை அபகரிக்கும் நோக்குடன் அளக்க முற்பட்டதாக தெரிய வருகின்றது.

இதனை பருத்தித்துறை பிரதேச உறுப்பினரும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மகாசபை உறுப்பினருமான தம்பிராசா மணீதரன் (வயது 48) என்பவர் தடுக்க முற்பட்ட வேளை அக்குழுக்களுக்கும் இவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டமையால் கோபமடைந்த குழுவினர் பிரதேச சபை உறுப்பினர் மீது கடுமையாகத் தாக்குதலை மேற்கொண்டதுடன் கத்தியாலும் வெட்டி காயப்படுத்தியுள்ளனர்.

இச் சம்பவத்தில் தலையில் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

# வெடி பொருட்களுடன் கைதானவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வெடிபொருட்களுடன் கைதான ஐவரை பிணையில் செல்ல யாழ்.மேல் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த வருடம் முழங்காவில் பகுதியில் சி-4 ரக வெடி பொருட்களுடன் குருநகர் பகுதியைச் சேர்ந்த 5 பேர் முழங்காவில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்களுக்கான பிணை விண்ணப்பம் நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேற்படி ஐவரையும் தலா 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார். (அ-6)



யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் சண்முககுமார் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி அருள்மதி சண்முககுமார் வெற்றியீட்டிய மாணவருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை என்பது நங்கூரம் பாய்ச்சிய கப்பலைப் போல அமைதியுடன் இருக்கும்.

– புத்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மெய்ப்பொருள் காண்பது அறிவு

உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறளை இப்போது அமெரிக்கர்கள் விரும்பிப் படிப்பதாக தகவல்.

வள்ளுவர் பெருமான் கூறாதது எதுவும் இல்லை எனும் அளவிற்கு திருக்குறளின் பெருமை உலகெங்கும் வியாபித்திருப்பது தமிழுக்கு கிடைத்த உயர் பெருமை எனலாம்.

அரசு, ஆட்சி, இல்லறம், துறவறம், கடவுள், ஊழ்வினை, அறிவு என எல்லாப் பொருளுக்கும் விளக்கம் தந்த திருவள்ளுவர், படை வலியும் துணைவலியும் மாற்றான் வலி பற்றியும் எடுத்தியம்பினார்.

கடுமையான முயற்சி பற்றி அழுத்தி வலியுறுத்திய வள்ளுவர் ஊழ்வினை வந்துறுத்தும் என்று கூறவும் தயங்கவில்லை.

இவைபற்றியெல்லாம் இவ்விடத்தில் கூறும்போது, திருக்குறள் பற்றிய கட்டுரையா இங்கு எழுதப்படுகிறது என்று நீங்கள் யாரும் நினைத்து விடலாகாது.

திருவள்ளுவர் முன்மொழிந்த ஆயிரத்து 330 குறள்பாக்களில் மிக முக்கியமானது, எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு என்ற குறள்பாவாகும்.

யார் எதைக் கூறினாலும் அவர் கூறுவதில் இருக்கக் கூடிய உண்மைத்தன்மை இத்தகையது என்பதை கேட்போர் புரிந்து கொள்ள வேண்டும்.

பொய் உரைத்தல், தீயன பேசுதல், வசை மொழிதல் என்பவற்றை வெறுக்கும் வள்ளுவர், அன்புக்குரிய உலக மாந்தர்களே யார் எதைக் கூறினாலும் அவர்கள் கூறியதற்குள் இருக்கக் கூடிய உண்மைப் பொருள் என்ன என்பதைக் கண்டு கொள்ளுங்கள் என்கிறார்.

ஆக, வள்ளுவனின் கருத்தில் அறிவு என்பது மெய்ப் பொருளைக் காண்பதாகும்.

மெய்ப்பொருளைக் காணத் தவறின் அங்கு ஏமாற்று நாடகங்கள், பித்தல் ஆட்டங்கள் அரங்கேறும்.

மக்களை ஏமாற்றலாம் என்ற நினைப்பு ஏற்பட்டு விட்டால் பொய்களும் புரளிகளும் வதந்திகளும் வசைகளும் வாழத் தொடங்கி விடும்.

பொய் இருக்கும் இடத்தில் உண்மை வாசம் செய்வதில்லை. இதன் காரணமாகவே, மெய்ப்பொருள் காண்பது அறிவு என்று வள்ளுவன் உரைத்தான்.

அன்பு மக்களே! இன்று நாட்டில் விமல் வீரவன்ச முதல், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர வரை கூறுவது என்ன என்று ஒரு கணம் சிந்தியுங்கள்.

அதேநேரம் இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் யஸ்வந் சின்ஹா கூறுவதை கவனியுங்கள். இதில் ஏதோ ஒன்று மெய்ப்பொருள் என்பதை உணர்ந்து கொண்டால் அது எது?

காலம் பதில் தரும் முன் நாம் அறிந்து வைப்பது மெய் அறிவின் பாற்பட்டதாகும்.

# கோத்தபாயவின் அழுத்தத்தினால் வழக்கு வாபஸ் பெறப்பட்டது

## ஆங்கில ஊடகம் தெரிவிப்பு

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அழுத்தத்தின் அடிப்படையிலேயே பெப்பிலியான பெசன் பக் வர்த்தக நிலையத்தின் மீதான தாக்குதல் குறித்த வழக்கு வாபஸ் பெறப்பட்டதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

பெப்பிலியான தாக்குதல் தொடர்பில் சரணடைந்த மூன்று பிக்குகளுடன் 17 சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டனர்.

எனினும் பெசன் பக் நிர்வாகம் இந்தப் பிரச்சினையை பேசித் தீர்த்துக் கொள்வதாக தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிமன்றம் இந்த வழக்கினை இரத்துச் செய்ததுடன் சந்தேகநபர்களையும் விடுவித்தது.

இந்நிலையில் பாதுகாப்புச் செயலாளரின் அழுத்தம் காரணமாகவே பெசன் பக் நிறுவனம் வழக்கினை வாபஸ் பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் பொது பல சேனா அமைப்பு இருக்கின்றமையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளரின் உறுதி வழங்கலின் அடிப்படையிலேயே குறித்த மூன்று பிக்குகளும் பொலிஸாரிடம் சரணடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் தேசிய ஒற்றுமையை கருத்திற்கொண்டே தாம் இந்த வழக்கினை வாபஸ் பெற்றதாக பெசன் பக் நிறுவனம் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)

## பாரிய சிலந்தி கண்டுபிடிப்பு



மனிதர்களின் முகம் ஒன்றின் அளவு பெரியதான சிலந்தி ஒன்று மாங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மரம் ஒன்றிலேயே இந்தச் சிலந்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது பொயிசிலத்தேரிய வகைச் சிலந்தியைச் சேர்ந்தவை என்று தெரிவிக்கப்படுகிறது.

குறுக்காக சுமார் 8 அங்குலம் நீளம் வரையில் இருக்கும் இந்தச் சிலந்தி மனிதனின் முகம் ஒன்றுக்கு ஈடான அளவில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# கிறிஸ்மஸ் தீவிலிருந்து 20 பேர் நாடு திரும்பினர்

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலி ருந்து இலங்கையை சேர்ந்த 20 புகலிடக் கோரிக்கையாளர்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குடிவரவு அமைச்சர் பிரெண்டன் ஓ கொனோர் தெரிவித்துள் ளார்.

இந்த 20 பேரும் கட்டாயத்தின் பேரிலேயே நேற்றுமுன்தினம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இங்கு தங்குவதற்கு சட்ட உரிமை இல்லை எனவும் அவர் கூறினார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்திலிருந்து இலங்கையைச் சேர்ந்த 963 புகலிடக் கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களில் 200 பேர் மாத்திரம் தங்களது சுயவிருப்பின் பேரில் திருப்பிச் சென்றதாக வும் அமைச்சர் பிரெண்டன் ஓ கொனோர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஒலிபெருக்கி தொகுதி அன்பளிப்பு

(பொற்பதி)

வட மராட்சி கிழக்கு யா/வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கி தொகுதி ஒன்று அந்தக் கிராமவாசியும் ஓய்வுபெற்ற தபால் அதிபருமாகிய சின்னத்துரை கிருஷ்ண பிள்ளையால் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நண்பகல் 12 மணியளவில் பாடசாலையின் அதிபர் த. செல்வகுமார் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டக் கல்வி பணிப்பாளர் பொன்னையா, பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் யோ.நெடுஞ்செழியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 51 ஆயிரத்து 495 ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் இந்நிகழ்வில் கருத்துரைகள் வழங்கும்போது பின் தங்கிய கிராமத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இப்படிப்பட்டவர்கள் முன்வந்து உதவிகளை செய்வதை பாடசாலை சமூகம் மேன்மேலும் வரவேற்று நிற்கிறது என்றார். (அ-3-64)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு 100 வீடுகள் தரப்படும்

(கும்பளை)

யாழ்.மாவட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு நூறு வீடுகள் கட்டித்தருவதாக வீடமைப்பு மற்றும் பொறியியல் துறை அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச உறுதியளித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நடைபெற்ற ஒன்றுகூடலின் போது வீடமைப்புத்துறை அமைச்சரிடம் சமுர்த்தி பயனாளிகளுக்கு நூறு வீடாவது கட்டித் தரும்படி யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி தலைவர் ப.ஐங்கரன் கேட்டதை அடுத்தே கட்டித் தருவதாக வாக்குறுதி வழங்கினார். (அ-3-19)

# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

118

நாம் இவ்வுலக வாழ்க்கையிலே அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் காரணம் எமது வினையே என்ற கருத்து நிலவுகிறது. இவ்வினையை சஞ்சித ஆகாய கன்மங்களென்பர். பண்டைத்தமிழ் இலக்கியமான புறநானூறு தீதும் நன்றும் பிறர் தரவாரா என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளது. வினைகள் எமது செயற்பாட்டிற்கு ஏற்பவே எம்மைத் தொடர்கின்றன. இவ்வினையின் பிடியிலிருந்து எம்மை இறைவனே விடுவிப்பான் என்ற நம்பிக்கையும் எம்மிடையே உண்டு. எமது முன்னோர் வழிபாட்டின் பயனே வினைகளை அழிப்பது என்ற கோட்பாட்டுடன் வாழ்ந்தனர்.

மணிவாசகரும் தான் வல்வினைகளால் பீடிக்கப்பட்டிருப்பதாக எண்ணிப் பல பாடல்களில் அதனைக் குறிப்பிட்டும் உள்ளார். என் வல்வினைக்காட்டை நீயே அழித்தருள வேண்டும் என்று பாடியுள்ளார். திரு உத்தரகோச மங்கை என்னும் திருத்தலத்திலே நீத்தல் விண்ணப்பப் பாடல்களை அவர் பாடிய போது ஒரு பாடலில் இக்குறிப்பு வந்துள்ளது. வினையை அழிக்கும் ஆற்றல் இறைவனுக்கு உண்டு என்பதை இறைவனுடைய அருட்செயல் ஒன்றன்மூலம் விளக்கியுள்ளார். கொடிய கஜன் என்னும் யானையாகிய குன்றினை உரித்து மாதங்காரி என்னும் மூர்த்தத்தால் உமையம்மையையே இறைவன் அஞ்சவைத்தான். யானையை உரிக்கும்போது கொண்ட ஒளியும் உக்கிரமும் மிகுந்த மாதங்காரி என்னும் உக்கிரத் திருவுருவைக் கண்ட உமையம்மை அஞ்சினாள் என்பதை எடுத்துக்கூறும்போது மணிவாசகர் இறைவனுடைய ஆற்றல் சாதாரண அடியாரை எவ்வாறு அஞ்சவைக்கும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

எனவே தன்னுடைய வினையையும் இறைவன் அழித்தருள்வான் என நம்புகிறார். வல்வினை ஒரு காடாக உருவகித்து இறைவன் தன்னுடைய நிலைபெற்ற அருளாகிய தீயை இட்டு எரித்துவிடுவார் எனக்கூறுகிறார். சாதாரண மனித வாழ்வியல் நடைமுறையில் அடர்ந்த காட்டை அழிப்பதற்குத் தீயிடும் வழக்கம் உண்டு. அதேபோல் தன்னுடைய வல்வினைக்காட்டையும் அழிக்கும்படி இறைவனை வேண்டுகிறார். இறைவனை மணிவாசகர் விடங்கன் எனக் குறிப்பிட்டு உள்ளார். விடங்கன் என்பதன் பொருள் உளி முதலிய கருவிகளால் தோற்றுவிக்கப்படாமல் சுயம்புவாகத் தோன்றியவன் என்பதாகும். காட்டிற்குத் தீயைக் கொளுவவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். கொளுவுதல் என்பது மாட்டி எரித்தலாகும். தன்னுடைய பிறவியை வேரொடுங் களைந்தாண்டுகொள் என அவர் கேட்பதுவும் அவருடைய மனப் பக்குவத்தை புலப்படுத்தி நிற்கிறது. பிறவியை ஒரு வலிய மரபாகவே எண்ணுகிறார். இதனை இலக்கணகாரர் ஏகதேச உருவகம் என விளக்கம் தந்துள்ளனர்.

வல்வினையே இறைவனை அடைய விடாமல் தன்னைத் தடுப்பதாக மணிவாசகர் எண்ணுகிறார். திருப்பெருந்துறையிலே இறைவன் தன்னை வலிய வந்து ஆட்கொண்ட போதும் இறைவனை நிரந்தரமாக அடைய முடியாமைக்குத் தன்வினையின் தொகுதியே காரணம் என்பதை அவர் நன்குணர்ந்தமையால் அதை எல்லோரும் நன்குணரவேண்டுமென எண்ணுகிறார். மனிதர்களுடைய செயற்பாட்டினால் அவர்களைத் துன்பம் சூழ்கிறது என்ற உண்மையை அவர்கள் பெரிதும் உணர்வதில்லை. உலகியல் நிலையில் தன் வினை தன்னைச்சுடும் என்ற முதுமொழியும் வழக்கிலுள்ளது.

இந்த வினையின் பயனை அனுபவிப்பது கடினமெனில் இறையருளால் அதை நீக்கிக் கொள்ளலாம். இறைவழிபாடு மனிதன் வினையை அகற்றவும் தீவினை செய்யாமலிருக்கவும் வழி காட்டும்.

மடங்கவென் வல்வினைக் காட்டை நின்
மன்னருட் டீக் கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதி கண்
டாயென பிறவியை வே
ரொடுங் களைந் தாண்டுகொள்
உத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித்
தாய் வஞ்சிக் கொம்பினையே

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐ.பி.எல். போட்டிக்கான பாதுகாப்பு கட்டணத்தை செலுத்த தவறினால் கிரிக்கெட் சங்கங்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யலாம்

# மும்பை உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

ஐ.பி.எல். போட்டிக்கான பாதுகாப்பு கட்டணத்தை செலுத்த தவறினால் கிரிக்கெட் சங்கங்களின் சொத்துக்களை மராட்டிய அரசு பறிமுதல் செய்யலாம் என்று மும்பை உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

மும்பை உச்ச நீதிமன்றத்தில் சந்தோஷ் பச்லாக் என்பவர் பொதுநல மனுத்தாக்கல் செய்தார். அதில், 2010.11ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கிய வகையில், மராட்டிய அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.9 கோடி கட்டண தொகையை பல்வேறு கிரிக்கெட் சங்கங்கள் இன்னமும் நிலுவை வைத்துள்ளன. அந்த நிலுவை தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறி இருந்தார்.

அந்த மனு நீதிபதிகள் ஏ.எம்.கான்வில்கர், ஏ.பி.பாங்கலே ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் விசாரணையில்,

ஐ.பி.எல். போட்டிகளுக்கான பாதுகாப்பு கட்டணத்தை செலுத்தாமல் நிலுவை வைத்திருக்கும் கிரிக்கெட் சங்கங்கள், எதிர்வரும் 18ஆம் திகதிக்குள் நிலுவைத் தொகையை அரசுக்கு வழங்க வேண்டும். ஒருவேளை அவர்கள் கட்டண நிலுவையை செலுத்தாவிட்டால், சட்டப்படி நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது புற்றி அரசு பரிசீலிக்கலாம். அவர்களின் சொத்துக்களை, அரசு பறிமுதல் செய்வதற்கு சட்டம் அனுமதிக்கிறது என்றனர்.

### ஏலத்தில் விட எதிர்ப்பு

இதற்கிடையே ஐ.பி.எல். அணிகளுக்கான வீரர்களை ஏலத்தில் விடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆம் ஆத்மி லோக் மஞ்ச் என்ற தொண்டு நிறுவனம் மும்பை உச்ச நீதிமன்றில் தனியாக ஒரு மனு தாக்கல் செய்துள்ளது.

அதில் மனிதர்களை ஏலத்தில் விடுவது கொடுங்கோன்மை ஆனது. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டத்தை மீறியது. எனவே விளையாட்டு வீரர்களை ஏலத்தில் விடுவதை நிறுத்துமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த மனு மீது எதிர்வரும் 25ஆம் திகதி விசாரணை நடைபெறும்.

# இறைவன் அருளால் இன்று வரை விளையாடுகின்றேன்

## - கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின்



அறிமுகப் போட்டியிலேயே எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டதாக நினைத்தேன் எனினும் இறைவன் அருளால் இன்று வரை தொடர்ந்து கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறேன் என்றார் கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர்.

பெங்களூரில் கடந்த புதன்கிழமை சன் பீஸ்ட் நிறுவனம் நடத்திய போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் அங்கு உரையாற்றுகையில்,

எனது 16ஆவது வயதில் முதல் முறையாக பாகிஸ்தானில் கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கினேன்.

கராச்சியில் நடைபெற்ற முதல் போட்டியில் களமிறங்கி துடுப்பெடுத்தாடிய எனக்கு அதிவேகப் பந்துவீச்சாளர்களான வசிம் அக்ரம், வக்கார் யூனிஸ் ஆகியோர் பந்து வீசினர்.

அப்போது ஓட்டம் எடுக்க வேண்டும் என்பதைவிட, தொடர்ந்து மைதானத்தில் தாக்குபிடிக்க வேண்டும் என்றே கடவுளிடம் வேண்டிக்கொண்டேன். ஆனால், சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தேன்.

ஓய்வறைக்குத் திரும்பிய எனக்கு சந்து போர்டே உள்ளிட்டோர் ஆறுதல் கூறினர். இருப்பினும் அந்தப் போட்டியுடன் எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டதாக நினைத்ததால், அன்றிரவு முழுவதும் எனது மனதுக்குள் பெரும் போராட்டமே நடந்தது.

எனினும் இறைவன் அருளால் இன்று வரை தொடர்ந்து கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறேன் என்றார் சச்சின் டெண்டுல்கர்.

## ரைடர் வீடு திரும்பினார்



தாக்குதலுக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் ஜெஸ்ஸி ரைடர், புதன்கிழமை வீடு திரும்பினார்.

இது தொடர்பாக ஜெஸ்ஸி ரைடரின் மேலாளர் ஆரோன் க்ளே கூறுகையில், மருத்துவமனையில் இருந்து ரைடர், வெளியேறியுள்ளார். தற்போது அவருடைய வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார். அவர்களைப்புடன் இருககிறார். எனினும் வீடு திரும்பியதால் மகிழ்ச்சியோடு உள்ளார் என்றார். கடந்த வாரம் மதுபான விடுதி அருகே ஏற்பட்ட தகராறில் இருமுறை தாக்குதலுக்கு உள்ளான ரைடர், படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சுயநினைவையும் இழந்தார்.

எனினும் தீவிர சிகிச்சையின் பலனாக கோமாவில் இருந்து மீண்ட ரைடர், அடுத்த சில தினங்களில் தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து சாதாரண அறைக்கு மாற்றப்பட் டார். இதைத் தொடர்ந்து அவர் புதன்கிழமை டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார்.


பங்களாதேஷ் அணியுடனான முதலாவது ரி-20 போட்டியில், இந்திய மகளிர் அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது. இந்தியா , பங்களாதேஷ் அணிகளிடையே 3 போட்டிகள் கொண்ட ரி20 நடைபெறுகிறது. முதல் போட்டி, வதோதரா ரிலையன்ஸ் விளையாட்டரங்கில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்களை எடுத்தது.

தொடக்க வீராங்கனைகள் பூனம் ராவுத் , திருஷ்காமினி ஜோடி முதல் விக்கெட்டுக்கு 130 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது. திருஷ்காமினி 56 ஓட்டங்கள் (57 பந்து, 7 பவுண்டரி), பூனம் 75 ஓட் டங்கள் (56 பந்து, 10 பவுண்டரி) விளாசினர். அடுத்து களமிறங்கிய பங்களாதேஷ் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 94 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. சல்மா காதுன் அதிகபட்சமாக 49 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். மற்ற வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

## வாகை சூடியது இந்திய மகளிர் அணி



# பணிந்தார் விஜேந்தர் சிங்



போதை மருந்து உட்கொண்ட விவகாரத்தில் சிக்கிய விஜேந்தர் ஊக்க மருந்து சோதனைக்கு தனது இரத்தம், சிறுநீர் மாதிரியை வழங்கினார்.

கடந்த 2008இல் நடந்த பீஜிங் ஒலிம்பிக் குத்துச் சண்டை போட்டியில், இந்தியாவின் விஜேந்தர் சிங் வெண்கலப் பதக்கம் வென்றார். சமீபத்தில் பஞ்சாப்பில் ரூ. 130 கோடி ஹெரோயின், பிடிபட்டதில் இவருக்கும் தொடர்பிருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனால், மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம், விஜேந்தரிடம் போதை மருந்து பரிசோதனை நடத்தும்படி உத்தரவிட்டது. ஆனால், சோதனைக்கு உட்பட விஜேந்தர் மறுத்து வந்தார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் விஜேந்தரின் இரத்தம், சிறுநீர் போன்றவற்றை பரிசோதனைக்காக வழங்கினார்.

இது குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் ஜிதேந்திரா சிங் கூறுகையில், ஒரு வீரருக்கு போதை மருந்து பரிசோதனை செய்ய வேண்டும் என்ற, அமைச்சகத்தின் உத்தரவை மறுக்க முடியாது. எனவே, விஜேந்தரின் இரத்த, சிறுநீர் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. இதன் முடிவிற்காக காத்துக்கொண்டிருக்கிறோம். இவர் தவறு செய்திருந்தால், நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

## தடகள வீராங்கனைக்கு 2 ஆண்டு தடை

ரஷ்யாவின் தடகள வீராங்கனை எலீனா சுரகோவா (வயது 26) லண்டன் ஒலிம்பிக்சில் 400 மீற்றர் தடகளத்தில் பங்கேற்றவர். இவர் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தினை உட்கொண்டதாக பரிசோதனையில் தெரியவந்ததை அடுத்து 2 வருடங்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அவருக்கு தடை விதித்துள்ளதாக அனைத்து ரஷ்ய விளையாட்டுக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த ஊக்கமருந்து பரிசோதனைக்கான மாதிரிகள் கடந்த ஜனவரி 26இல் போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்ற பயிற்சி முகாமில் வைத்து அவரிடம் இருந்து பெறப்பட்டன. இதனை பரிசோதித்ததில் அவர் ஊக்கமருந்து பாவித்தமை தெரிய வந்ததை தொடர்ந்து 2013ஆம் ஆண்டில் இருந்து போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையை தோற்கடித்தது பெங்களூரு




மும்மை அணிக்கு எதிரான போட்டியில் பெங்களூருஅணி 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஐபிஎல் தொடரில் 2 வது லீக் ஆட்டம் நேற்று பெங்களூரு சின்னசாமி அரங்கில் நடைபெற்றது.

இதில் உள்ளூர் அணியான பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி மும்பை இந்தியன்ஸ் அணியுடன் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் பந்து வீச முடிபு செய்தது.

முதலில் களமிறங்கிய றோயல் சலஞ்சர்ஸ் அணி ஆரம்பத்தில் மும்பை பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறியது. தொடக்க வீரர் டில்ஷான் 8 பந்துகளை எதிர்கொண்டும் ஓட்டமேதும்எடுக்காமல் ஆட்டமிழந்தார்.



வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் பந்தில் அவர் கிளீன் போல்டானார். அவரைத் தொடர்ந்து ஹெயிலுடன் விராட் ஹோலி இணை ஆட்டம் சூடுபிடித்தது.


14 பந்துகளில் 4 பவுண்டரி 1 சிக்சருடன் 24 ஓட்டங்கள் விளாசிய ஹோலி எல் பி டபுள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அதிரடியாக பந்துகளை சிக்சர் பவுண்டரிகளாக பறக்க விட்ட ஹெயில் அரை சதம் கடந்தார்.

ஆனால் மறுமுனையில் ஆடிய வீரர்கள் சோபிக்கவில்லை. இதனால் பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிபில் 5 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஹெயில் 92 ஓட்டங்களுடனும் அருண் கார்த்திக் 19 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இதையடுத்து 157 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி 20 ஓவர்களில் 154 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அவ்அணியின் தினேஷ் கார்த்திக் 60 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் வினய் குமார் 3 விக்கெட்டினை கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக கிறிஸ் ஹெயில் தெரிவானார்.

# நண்பர்களின் சமர்

## கனகரத்தினம் ம.ம.வி வெற்றி



நண்பர்களின் சமர் என அழைக்கப்படும் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்று முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி 24.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 89 ஓட்டத்தினை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அஞ்சியன் 21,விதுஷன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கலைச்செல்வன் 4, கம்சிகாந்,விதுர்ஷன் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

90 ஓட்டத்தினை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் அவ்இலக்கினை 19.1 ஓவர்களில் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் மதன் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டத்தினையும் கம்சிகாந் 21, கலைச்செல்வன் 18 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்து வீச்சில் விதுஷன், அஞ்சியன் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகன், சிறந்த பந்து வீச்சாளராக கலைச்செல்வனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக மதனும், சகல துறை ஆட்டக்காரராக கம்சிகாந்தும் தெரிவாகினர்.

# கொட்டடி மீன் சந்தை வாள்வெட்டு

## சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை ஊழியர்கள் மீது வாளினால் வெட்டி தாக்குதல் மேற்கொண்ட குற்ச்சாட்டின் பேரில் யாழ்ப்பாண்ம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.கொட்டடி மீன் சந்தையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது யாழ்.மாநகர ஊழியர்கள் 5 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தினர். இதன்போது நீதவான் பெ.சிவகுமார் சந்தேகநபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-6)

# கண்ணகி ஆலய கிராம ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை கண்ணகி அம்மன் தேவஸ்தான வருடாந்த கிராம ஊர்வலம் இன்று காலை 8 மணிக்கு ஆலயத்தில் இருந்து ஆரம்பமாக உள்ளது.

8ஆம் திகதி திங்கட்கிழமை தீ மித்தலும்; அபிசேகம் மற்றும் அன்னதானமும் இடம் பெறவுள்ளது. (எ-4)

# காணி இல்லாதவர்களுடன் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைத்துறைப்பற்று பிரதேச பிரிவில் கிராமசேவகர் ஊடாக காணி இல்லை என பதிந்த தமிழ் குடும்பங்களுக்கும் புதியாத தமிழ் குடும்பங்களுக்குமான விசேட கூட்டம் ஒன்று இன்று 11 மணியளவில் முள்ளியவளை வடக்கு பொது நோக்கு மண்டபத்திலும் மாலை 4 மணிக்கு கணுக்கேணி கற்பக பிள்ளையார் கோவிலடி வளாகத்திலும் இடம்பெறவுள்ளது

இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட ஈபிடிபி அமைப்பாளர் அ.ஜெயராஜ் (கிருபன்) அறிவித்துள்ளார்.(எ-267)

# இலங்கை...

கள் ஓயவில்லை. தேசப்பற்றைக் கருத் தில் கொண்டு ஐ.பி.எல். போட்டித் தொடரை இலங்கை வீரர்கள் புறக்கணிக்க வேண்டும் என சிங்கள அமைப்புகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கின்றன.

இந் நிலையிலேயே இந்தியன் பிரிமியர் லீக் தொடரிலிருந்து வெளியேற வேண்டாம் என அரசு இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அதே வேளை இலங்கை கிரிக்கெட் வீரர் நாட்டை காட்டிக் கொடுத்து விட்டனர் எனக் கோரி அவர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் கிரிக்கெட் சபைக்கு முன்னாள் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சிங்கள ராவண அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. (எ-11)

# இனக் கல...

களையும் மேற்கொண்டது. தற்போது அதே போன்ற செயற்பாட்டையே பொதுபல சேனா அமைப்பு இலங்கையில் ஆரம்பித் திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது இலங்கையை உலக நாடுகளில் இருந்து வேறொரு இடத்திற்கு கொண்டு செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையின் எதிர்காலம் சச்சைக்குரியதாக இருப்பதாகவும் அந்தச் சஞ்சையை சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

# நல்லிணக்க...

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பருந்துரைகள் அமுல் படுத்தப்பட்டவில்லை என எதிர்கட்சிகளும் சர்வதேச சமூகமும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது

இந்நிலையில் சர்வதேச ரீதியாக பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை சமாளிக்கும் ராஜதந்திர முனைப்பாக இந்த நடவடிக்கை கருத்ப்படுகின்றது

இதே வேளை எதிர்வரும் காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா தெரிவித்துள்ளார்

# பொது பல சேனாவின்...

தின் பின்னால் இருந்து அதன் நடவடிக்கைகளுக்கு ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கின்றதா?

அவர்களுக்கு ஆதரவு வழங்குவதன் காரணமாகத்தான் அவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்களா? எனும் சந்தேகம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பொது பல சேனா இயக்கமானது சட்ட பூர்வமற்ற பொலிஸ் என்று தங்களை பிரகடனப்படுத்திக் கொண்டு இவ்வாறு முஸ்லிம்களுக்கு எதிராக மிக மோசமான நிலையில் அடிப்படை மனித உரிமைகளை மீறி வர்த்தக நிலையங்களை காவி உடை அணிந்த ஒரு சிலர் தாக்குவதை சிசிடிவி கமரா பதிவு செய்துள்ள போதிலும் இதுவரை அவர்களுக்கு எதிராக தக்க நடவடிக்கை எடுப்பதை தவிர்த்து இரு தரப்பாரையும் சமாதானப்படுத்துகின்ற பணியே தொடர்ந்து இடம்பெறுகின்றன

முஸலிம்களின் வர்த்தகத்திற்கு எதிராகவும் மத நடவடிக்கைகளுக்கு எதிராகவும் முஸ்லிம்களின் உணர்வுகளை மறுக்கடிப்பதற்கும் இவ்வாறான செயற்பாடுகள் அனுமதிக்கப்படுகின்றனவா? எனும் சந்தேகம் முஸ்லிம்கள் மத்தியில் வலுப்பெறுகின்றன.

ஆகவே தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமளிக்காமல் உடனடியாக சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி முஸ்லிம் சமூகத்தினுடைய உடைமைகளையும் அவர்களுடைய மத நடவடிக்கைகளையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹ் விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை

வைத்தீஸ்வரா வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைச் சேர்ந்த சின்னத்துரை கெங்காதரன் (வயது 57) என்பவரை நேற்று முதல் காணவில்லை.

சித்தசுவாதீனமற்றவரான இவரை ஆசையப்பா என அழைத்தாலே தன்னை அடையாளம் கண்டு கொள்வார்.

குறித்த நபரை யாரேனும் அடையாளம் கண்டால் மேற்படி முகவரிக்கு தயவு செய்து அறியத் தரவும்.

-குடும்பத்தினர்

(சி-2880)


## இந். வெளி...

வுரிமை ஆணைக்குழுவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த பின்னர் இலங்கையில் அதிகரித்து வரும் இந்திய எதிர்ப்புணர்வு குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரியவருகின்றது.

இதனிடையில் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களான எல்.கே.அத்வானி மற்றும் சுஸ்மா சுவராஜ் ஆகியோருடனும் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## தமிழக...

தீர்த்துக் கொள்ள முடியும் தமிழகத்திற்குச் செல்லும் இலங்கையர்கள் துன்புறுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

தற்போது நாட்டில் பல அமைப்புக்கள் உருவாகி பேயாட்டம் நடத்தி வருகின்றன. முப்பது ஆண்டு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் பிரச்சினைகள் அவசியம் இல்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். (எ-11)

## சா/த பெறு...

பெறுபேறும் பெறப்படும்.

இப்பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக ஏதேனும் முறைப்பாடு களோ விசாரணைகளோ இருப்பின் இலங்கை பரீட்சை திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அறிவித்துள்ளது.

1911 - 24 மணிநேர சேவை. 011 2784208, 011 2784537, 011 3140314, 011 3188350, தொலை நகல் : 011 2784 422, மின்னஞ்சல் : exams@doenets ஆகியவற்றின் மூலம் தொடர்பு கொள்ள முடியும். கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப் படையில் யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்களில்9ஏபெற்றோரின்விபரம்வருமாறு,

வி.சண்முகேசன், ரா.சுதர்சன், க.தர்சிகன், பா.ஆதீபன், சு.வித்தியாதரன், ம.ஜெசூரன், சு.ஹரிவர்த்தனன், கி.கீர்த்தனன், ர.கோபிசான், து.நிலக்ஷன், த.நிறுஜன், சே.சேந்தன், சி.சிவசெந்தூரன், த.சோபிதன், சி.ரேனுகாந் தன், ப.தினேஷன், ச.திலக்ஷன், கி.லோகதீஸன். இதேவேளை நேற்றிரவு பெறுபேறுகள் வெளியானதால் ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகளை பெறமுடியவில்லை. (எ-11)

## அமெரிக்கா...

கள் சிறிய அளவிலான, இலகுவான மற்றும் பலதரப்பட்ட அணுகுண்டுத் தாக்குதல்களால் எதிர் கொள்ளப்படும் என்று வடகொரியாவின் இராணுவத் தளபதிகள் கூறினர்.

குவாம் தீவிலிருந்து அமெரிக்க பிரதான நிலைப்பரப்பிலிருந்தும் அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் கொரிய தீபகற்பத்தின் மீது பறப்பதை வடகொரியா கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

ஆனால்வடகொரியாவுக்கு அமெரிக்காவை நேரடியாக தாக்கும் திறன் இல்லை என்றாலும் இந்தப் பிரதேசத்தில் அதன் இலக்குகளைவடகொரியா தாக்க முடியும் என்று பகுப்பாய்வாளர்கள் கூறுகிறார்கள். (எ-11)

## யாழ். - மன்...

அறியதந்துள்ளன.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் சேவையில் ஈடு படமாட்டாதுஎனஅவர்மேலும் தெரிவித்தார். (எ)


பச்சைப்பசேலென பரந்த வயல்வெளிகள் வளம்பெற
வயல்களில் வளரும் வெங்காயச் செடிகள் வளம்பெற
வெங்காயம் பயிரிடும் பொற் கரங்கள் வளம்பெற
நெல்லியடி வாழ் அனைவரின் உள்ளங்கள் வளம்பெற



பழைய உறவுகளை புதுப்பித்துக் கொள்ளவும்
புதிய உறவுகளை வளர்த்துக் கொள்ளவும்

உங்களின் சகல நிதித் தேவைகளையும் பூர்த்தி செய்திடும் வகையில்
2013 ஏப்ரல் 5ஆம் திகதி முதல் நெல்லியடியில் நாம்

DFCC
வர்தன் வங்கி
உங்களுக்கு அதிநட்புறவான வங்கி

இல. 30, தங்கஸ்தன், பருத்தித்துறை வீதி, நெல்லியடி. தொ. 021 2 264 706
அழையுங்கள் 011 2 663 888, இணையத்தளம்: www.dfcc.lk

DFCC வர்தன வங்கி ஃபிட்ச் ரேடிங் லங்காவின் AA- (lka) தரப்படுத்தலை பெற்றுள்ளது.
DFCC வர்தன வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.



NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2015
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானபிரிவுகள்
ஆரம்பம்:-07/04/2013 ஞாயிறு காலை 8.00 மணி
(சி-2879)



புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்
A/L 2015
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்:-07/04/2013 ஞாயிறு காலை 8.00மணி
(சி-2879)



Digital
விஷேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-2873)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org